Y.M.C.A.

Registered as a Newspaper பக்கங்கள் 04 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 புரட்டாதி 04 [20-09-1993] திங்கட்கிழமை ஓசை 214

## 15 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளை வேலைக்கு அமர்த்த தடை

15 வயதுக்குட்பட்ட பிள்ளைகளை வேலைக்கமர்த்துவதைத் தடைசெய்வதற்கான சட்டங்களை இயற்றுவதற்கும், பிள்ளைகளைத் துஷ்பிரயோகம் செய்வது சம்பந்தமான சட்டங்களைக் கடுமையாக்குவதற்கும் அமைச்சரவை புதன்று முடிவு செய்துள்ளது. இந்த இருபிரச்சினைகள் பற்றியும் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நியமிக்கப்பட்ட நிபுணர்கள் கமிட்டி அறிக்கையின் சிபார்சுகளைத் தொடர்ந்தே அமைச்சர் இந் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது. பிள்ளைகளை வேலைக்கமர்த்தல் சம்பந்தமான தற்போதைய சட்டங்களில் பல குறைபாடுகள் உள்ளன தற்போதுள்ள சட்டங்களின் படி பிள்ளைகளை வேலைக்கமர்த்துவதற்கான ஆகக் குறைந்த வயது 12, 14 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (4 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் விமானப்படை அனர்த்தம்

# கூடியிருந்த மக்கள்மீது 'றொக்கட்' தாக்குதல்;

# 13 பேர் உடல் சிதறிப் பலி; 41 பேர் படுகாயம்

## கலை நிகழ்ச்சியில் நடந்த துயரம்

(முல்லைத்தீவு)

முல்லை மாவட்டத்தில் நேற்று முன்தினம இரவு நடைபெற்ற கலைநிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டிருந்த மக்கள் கூட்டத்தின்மீது சிறிலங்காவின் புக்காரா விமானம் றொக்கட் தாக்குதலை மேற்கொண்டது. இவ் றொக்கட் தாக்குதலில் சிக்குண்ட 13 பொதுமக்கள் ஸ்தலத்திலேயே உடல் சிதறிப் பலியானதுடன் 41ற்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

நேற்று முன்தினம் மாலை 5-30 மணியளவில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மதிதளன் கிராமத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த நிகழ்வின் போது அவ்விடத்திற்கு வந்த சிறிலங்கா விமானப்படையின் உலங்கு வானூர்தி ஒன்று பல தடவைகள் வட்டமிட்டு நோட்டமிட்டபோது புக்காரா விமானம் ஒன்று அடுத்தடுத்து மூன்று குண்டுகளை வீசின. இதன்பின் அவை அங்கிருந்து அகன்றன.

இரவுவேளை மீண்டும் கலை நிகழ்வுகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளை அவ்விடத்திற்கு திடீரென வந்த சிறிலங்கா விமானப் படையின் புக்காரா விமானம் ஒன்று மக்கள் குழுமியிருந்த இடத்தை நோக்கி ஒரே தடவையில் ஏழு றொக்கட்டுகளை ஏவியது. இவ் றொக்கட் குண்டுகள் மக்கள் மீது வீழ்ந்து வெடித்ததில் பதின்மூன்று பொதுமக்கள் அந்த இடத்திலேயே உடல் சிதறிப் பலியாகினர். மேலும் 41ற்கு மேற்பட்ட பொதுமக்கள் படுகாயமடைந்தனர்.

### விமான குண்டு வீச்சில் உயிரிழந்தோர் விபரம்

முல்லை மாவட்டம் மதிதளன் கிராமத்தில் சிறிலங்கா விமானப்படையின் புக்காரா குண்டு வீச்சு விமானம் மக்கள் குழுமியிருந்த பகுதிமீது நடாத்திய றொக்கட் தாக்குதலில்

(23) அம்பலவன் பொக்கணை

ஃ இந்திரேஸ் யோசேப் (31) 6ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு

ஃ சதாசிவம் அண்ணாத்துரை (24) அம்பலவன் பொக்கணை

### காயமடைந்த

### ஆய்வுகூட உபகரணங்கள் வந்தன

(தெசபுரம்)

யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கு தேவையான ஆய்வுகூட உபகரணங்கள் அண்மையில் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளன.

இவற்றில் ஆய்வுகூட பற்ற (4 ஆம் பக்கம் பார்க்க)

## தியாகி திலீபனுக்கு மக்கள் இதயபூர்வ அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

தியாக தீபம் லெப்.கேணல் திலீபனின் ஆறாம் ஆண்டு நிறைவு நினைவு நாட்களை முன்னிட்டு குடா நாட்டு மக்கள் தினசரி தமது இதயபூர்வமான அஞ்சலியை செலுத்தி வருகின்றனர்.

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்திற்காகவும் இலங்கை இந்திய அரசுகளின் அடக்குமுறை நடவடிக்கைகளையும், துரோகத்தனங்களையும் உலக அரங்கில் அம்பலப்படுத்துவதற்காகவும் தன்னுயிரை தியாகம் செய்த தியாகி திலீபனின் தியாகத்தை நினைவு கூர்ந்து இவ் அஞ்சலி நிகழ்ச்சிகள் குடாநாடெங்கும் மிகவும் உணர்வு பூர்வமாக நடைபெற்று வருகின்றன.

இவ்வாறான நிகழ்வுகள் குடாநாட்டில் வட்டப் பிரிவு ரீதியாகவும் கோட்ட மட்டத்திலும் நடைபெற்று வருகிறது.

இவ்வாறான நிகழ்வுகளில் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது மக்கள் அதிகளவில் கலந்து கொண்டு வருகின்றனர் இவற்றைவிட தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலான பதாகைகள் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கட்டப்பட்டுள்ளன. அத்துடன் சிவப்பு மஞ்சள் வர்ணத் தோரணங்கள் ஆகியன வீதிகள் தோறும் கட்டப்பட்டுள்ளன. இதனால் குடாநாடு பூராவும் நாளுக்கு நாள் எழுச்சிக் கோலம் பூண்டு (4ஆம் பக்கம் பார்க்க)

### தியாகி திலீபன் நினைவு உண்ணாவிரதம், சிரமதானம்

தியாகி லெப்டினன்ட்கேணல் திலீபனின் ஆறாவது ஆண்டு நினைவாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ள உண்ணாவிரத நிகழ்வுகள் நாளை பின்வரும் இடங்களில் நடைபெறவுள்ளன:-

சங்கானை வட்டம் சங்

கோவில் முன்றல், உரும்பராய் சிற்றூர் மக்கள்; சண்டிலிப்பாய் வட்டம் ஆனைக்கோட்டை மூத்தவிநாயகர் கோவில் முன்றல், தெல்லிப்பளை, ப. நோ கூ. ச அங்கத்தவர்கள்; உடுவில்/தெல்லிப்

கொண்டிருந்த மக்கள் கூட்டத்தின்மீது சிறிலங்காவின் புக்காரா விமானம் றொக்கட் தாக்குதலை மேற்கொண்டது. இவ் றொக்கட் தாக்குதலில் சிக்குண்ட 13 பொதுமக்கள் ஸ்தலத்திலேயே உடல் சிதறிப் பலியானதுடன் 41ற்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

நேற்று முன்தினம் மாலை 5-30 மணியளவில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மத்தளன் கிராமத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த நிகழ்வின் போது அவ்விடத்திற்கு வந்த சிறிலங்கா விமானப்படையின் உலங்குவானூர்தி ஒன்று பல தடவைகள வட்டமிட்டு நோட்டமிட்டபோது புக்காரா விமானம் ஒன்று அடுத்தடுத்து மூன்று குண்டுகளை வீசின. இதன்பின் அவை அங்கிருந்து அகன்றன.

இரவுவேளை மீண்டும் கலை நிகழ்வுகள் இடம் பெற்றுக் கொண்டிருந்த வேளை அவ்விடத்திற்கு திடீரென வந்த சிறிலங்கா விமானப் படையின் புக்காரா விமானம் ஒன்று மக்கள் குழுமியிருந்த இடத்தை நோக்கி ஒரே தடவையில் ஏழு றொக்கட்டுகளை ஏவியது. இவ் றொக்கட் குண்டுகள் மக்கள் மீது வீழ்ந்து வெடித்ததில் பதின் மூன்று பொதுமக்கள் அந்த இடத்திலேயே உடல் சிதறிப் பலியாகினர். மேலும் 41ற்கு மேற்பட்ட பொதுமக்கள் படுகாயமடைந்தனர்.

## விமான குண்டு வீச்சில் உயிரிழந்தோர் விபரம்

முல்லை மாவட்டம் மத்தளன் கிராமத்தில் சிறிலங்கா விமானப்படையின் புக்காரா குண்டு வீச்சு விமானம் மக்கள் குழுமியிருந்த பகுதிமீது நடாத்திய றொக்கட் தாக்குதலில் பலியான 13பேர்களது விபரம் வருமாறு;

ஃ ஜேசுக்குமார் அந்தனிதாஸ் (29) பாலைக்குடியிருப்பு
ஃ மரியதாஸ் அன்ரன் யேசுதாஸ் (30) மணிக்குடியிருப்பு, முள்ளியவளை
ஃ தியாகராஜா கண்ணன் (16) ஆனந்தபுரம்
ஃ இம்பனுவேல் ஆனந்தராஜா (19) இரணைப்பாலை
ஃ சந்திரசிவம் புலேந்திரன் (15) பாத்திமாவீதி, மாதகல்
ஃ பிரான்சிஸ் அருள்தாஸ் (23) அம்பலவன் பொக்கணை
ஃ இந்திகிரேஸ் யோசேப் (31) 6ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு
ஃ சதாசிவம் அண்ணாத்துரை (24) அம்பலவன் பொக்கணை
ஃ சுஜாத்தா திலிப் மேரி (09) அந்தோனியார் கோவிலடி புதுமத்தளன்
ஃ சின்னப்பு அல்போன்ஸ் (21) வலேயன்மடம் முள்ளிவாய்க்கால்
ஃ முத்தையா துரைசிங்கம் (45) இத்தாவில், பளை
ஃ தம்பிராஜா குணசீலன் (18) இரணைபபாலை, புதுக்குடியிருப்பு
ஃ கந்தையா பரமானந்தம் (ஆசிரியர்) (40) அல்வாய் வடக்கு வடமராட்சி

## ஆய்வுகூட உபகரணங்கள் வந்தன

(தெல்லிப்பழை)

யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கு தேவையான ஆய்வுகூட உபகரணங்கள் அண்மையில் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன.

இவற்றில் ஆய்வுகூட பற்ற

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## காயமடைந்த 41 பேர் விபரம்

(முல்லைத்தீவு)

நேற்றுமுன் தினம் இரவு மத்தளன் கிராமத்தில் 'புக்காற' விமானம் நடத்திய தாக்குதலில் காயமடைந்த 41பேருடைய விபரங்கள் வருமாறு:-

குலசேகரன் சிவனேசன் (வயது 32-முள்ளிவாய்க்கால்), சு. தயாநிதி (வயது 21-புதுக்குடியிருப்பு), வேபிகரன் (வயது 21-புதுக்குடியிருப்பு, ராஜேஸ்வரி (வயது 15-புதுக்குடியிருப்பு), சொர்ணலிங்கம் (வயது 31-புதுக்குடியிருப்பு), பாஸ்கரன் (வயது 25-புதுக்குடியிருப்பு), தவராஜ் (வயது 33-புதுக்குடியிருப்பு). மத்தியூஸ் அன்ரனி (வயது 16-புதுக்குடியிருப்பு), அல்பேட் செல்வக்குமார் (முல்லைத்தீவு) எம். இராஜேஸ்வரி (வயது 16-புதுக்குடியிருப்பு) சகாயநாயகி (வயது 18-புதுக்குடியிருப்பு), பதமராஜா (வயது 28- புதுக்குடியிருப்பு), தயாளதாஸ் [வயது 21 - புதுக்குடியிருப்பு) பேடிகிரப்ட் [வயது 23-முல்லைத்தீவு] பே. சுபாஜி (வயது 18 - புதுக்குடியிருப்பு), ஆ. தங்கவேலு (வயது 39 - புதுக்குடியிருபபு), புனிதவளம் (வயது 24 - புதுக்குடியிருப்பு), திலீப் தவராசா (வயது 32 - புதுக்குடியிருப்பு), அன்ரனி சிஸ்ரன் (வயது 16 - புதுக்குடியிருப்பு), அன்ரன் யூட் (வயது 19-புதுக்குடியிருப்பு), ரஞ்சன் (வயது 23 - முல்லைத்தீவு),

[4ஆம் பக்கம் பார்க்க]

## மேஜர் மூர்த்தி மாஸ்டர் உட்பட மூன்று புலிகள் வீரச்சாவு

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மத்தளன் கிராமத்தில் நேற்று முன்தினம் சிறிலங்கா விமானப்படை குண்டு வீச்சு விமானம் நடாத்திய குண்டு வீச்சின்போது விடுதலைப் புலிகள் தரப்பில் மூவர் வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாவடைந்த,

★ கடற்புலிகளின் பொறியியல் துறைப் பொறுப்பாளர் மேஜர் மூர்த்தி மாஸ்ரர் (சந்திரசேகரம் கிருஷ்ணமூர்த்தி- பொலிகண்டி வல்வெட்டித்துறை)

★ கடற்புலி 2ஆம் லெப்டினன்ட் விவேகன் (பொன்னன் கிருபாகரன்-சர்வோதய வீதி, ஆவரங்கால் புத்தூர்)

★ வீரவேங்கை நவனீதன் (விஜயராஜா விஜய மோகனராஜா-இல. 146, டி-10 உருத்திரபுரம கிளிநொச்சி) ஆகிய மூன்று போராளிகளுக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.



கடற்புலிகளின் பொறியியல் பிரிவுப் பொறுப்பாளர்
மேஜர் மூர்த்தி மாஸ்ரர்



கடற்புலி
2ஆம் லெப். விவேகன்



வீரவேங்கை
நவனீதன்

## படுகாயமடைந்தோர் யாழ். ஆஸ்பத்திரியில்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மத்தளன் பகுதியில் சிறிலங்கா விமானப் படையினர் நடாத்திய றொக்கட் தாக்குதலில் படுகாயமடைந்த ஒரு பகுதியினர் நேற்று நள்ளிரவு யாழ். போதனா மருத்துவமனைக்கு எடுத்து வரப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி தாக்குதலில் காயமடைந்த ஒன்பது பேர் வவுனியா வைத்தியசாலையிலும், இருபது பேர் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஏனையோர் கிளிநொச்சி மருத்துவ மனையிலும் யாழ். போதனா மருத்துவமனையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

[யாழ்ப்பாணம்]

தியாக தீபம் லெப். கேணல் திலீபனின் ஆறாம் ஆண்டு நிறைவு நினைவு நாட்களை முன்னிட்டு குடாநாட்டு மக்கள் தினசரி தமது இதய பூர்வமான அஞ்சலியை செலுத்தி வருகின்றனர்.

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்திற்காகவும் இலங்கை இந்திய அரசுகளின் அடக்குமுறை நடவடிக்கைகளையும், துரோகத்தனங்களையும் உலக அரங்கில் அம்பலப்படுத்துவதற்காகவும் தன்னுயிரை தியாகம் செய்த தியாகி திலீபனின் தியாகத்தை நினைவு கூர்ந்து இவ் அஞ்சலி நிகழ்ச்சிகள் குடாநாடெங்கும் மிகவும் உணர்வு பூர்வமாக நடைபெற்று வருகின்றன. இவ் அஞ்சலி நிகழ்வுகளில் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் மற்றும் சிரமதானப் பணிகள் முக்கிய இடம் வகிக்கின்றன.

இவ்வாறான நிகழ்வுகள் குடாநாட்டில் வட்டப் பிரிவு ரீதியாகவும் கோட்ட மட்டத்திலும் நடைபெற்று வருகிறது.

இவ்வாறான நிகழ்வுகளில் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது மக்கள் அதிகளவில் கலந்து கொண்டு வருகின்றனர் இவற்றைவிட தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலான பதாகைகள் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கட்டப்பட்டுள்ளன. அத்துடன் சிவப்பு மஞ்சள் வர்ணத் தோரணங்கள் ஆகியன வீதிகள் தோறும் கட்டப்பட்டுள்ளன. இதனால் குடாநாடு பூராவும் நாளுக்கு நாள் எழுச்சிக் கோலம் பூண்டு

(4ஆம் பக்கம் பார்க்க)

## தியாகி திலீபன் நினைவு உண்ணாவிரதம், சிரமதானம்

தியாகி லெப்டினன்ட்கேணல் திலீபனின் ஆறாவது ஆண்டு நினைவாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ள உண்ணாவிரத நிகழ்வுகள் நாளை பின்வரும் இடங்களில் நடைபெறவுள்ளன:-

சங்கானை வட்டம் சங்கானை அரசடி வைரவர் கோவில் முன்றல், சங்கானை தெ. ப. பொ. சங்கம்; கோப்பாய் வட்டம், நீர்வேலி வாய்க்காற்றரவை பிள்ளையார் கோவில் முன்றல், உரும்பராய் சிற்றூர் மக்கள்; சண்டிலிப்பாய் வட்டம் ஆனைக்கோட்டை மூத்தவிநாயகர் கோவில் முன்றல், தெல்லிப்பளை, ப. நோ கூ. ச அங்கத்தவர்கள்; உடுவில்/தெல்லிப்பளை வட்டம், சுன்னாகம் சிவன்கோவில் முன்றல், அளவெட்டி சிற்றூர் மக்கள்; யாழ்ப்பாணம வட்டம், நல்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வாந்திபேதி பரவுவதைத் தடுக்க நடவடிக்கை தீவிரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் தோன்றியிருக்கும் வாந்திபேதி நோய் அபாயம் குறித்தும் இந்நோயினைக் கட்டுப்படுத்துவதற்கும் நோய் பரவுவதைத் தடுத்து நிறுத்துவதற்கும் துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக யாழ் நகரப் பகுதிகளிலும் அதனை அண்டிய புற நகரப்பகுதிகளிலும் வாந்திபேதி நோயைக் கட்டுப்படுத்தும் பல நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன என்று யாழ் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தெய்வேந்திரன் தெரிவித்தார்.

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள உணவுவிடுதிகள், சேநீர்சாலைகள் போன்றவை நேற்று முதல் திடீர் சோதனைக்குட்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி மற்றும் பொதுசுகாதாரப் பரிசோதகர் ஆகியோர் அடங்கிய பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக் குழுக்கள் மேற்படி பகுதிகளில் திடீர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. மேலும் இக் குழு சுத்தமான குடிநீர் வசதி மற்றும் உணவில் சுகாதாரம் பேணுதல் போன்றபல் வேறுவிடயங்கள் குறித்தும்கவனம்செலுத்தும். மேற்படி விடயங்களில் திருப்திகரமான நிலைமைகாணப்படாத உணவுவிடுதிகளை உடனடியாக மூடிவிடுவதற்கும் இக் குழுவினருக்கு விசேட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளன.

இவற்றைவிட பொதுமக்கள் நெருக்கமாக வாழும் பகுதி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வாந்திபேதி நோயாளி மேலும் ஒருவர் கண்டுபிடிப்பு

(யாழ்ப்பாணம்)

வாந்திபேதி நோயின் அறிகுறியுடன் மேலும் ஒருவர் நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நாவற்குழி டயர் தொழிற்சாலை முகாமில் இருந்து இந்நோயாளி இனம் காணப்பட்டுள்ளார் என்றும் திருகோணமலை உப்புவெளியில் இடப்பெயர்ந்தோர் முகாமில் இருந்து வந்தவர் இவருடன் தங்கியிருந்ததினால் இவ்நோய் ஏற்பட்டிருக்கலாம் எனவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

"நான் ஆத்ம ரீதியாக உணர்கிறேன். இன்றில்லாவிட்டாலும் என்றோ ஒருநாள் எமது மக்கள் நிச்சயமாக விடுதலையடைவார்கள்.

- திலீபன்

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்,
யாழ். மாவட்டம்,

(சி-7435)

## சகாய விலையில் தென்னம்பிள்ளைகள்

(தொல்புரம்)

தென்னை உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் முகமாக நல்ல இன தென்னங்கன்றுகள் சகாய விலையில் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

தொல்புரம், சாவகச்சேரி, நல்லூர் கமநலச் சேவை நிலையங்களில் மேற்படி தென்னங்கன்றுகள் தென்னை உற்பத்தியாளருக்கு சகாய விலையில் வழங்கப்படுகிறது. இதே வேளை யாழ். மாவட்டத்திற்கு தேவையான தென்னை உரத்தை கப்பல் மூலம் இங்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் யாழ். கமநல சேவைத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தெரிய வருகிறது. (41)

## கண்டெடுப்பு

செல்வன் பிரப்பவிநாயகரால் நல்லூரில் கண்டெடுக்கப்பட்ட மோதிரமொன்று எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. உரியவர்கள் அலுவலக நேரத்தில் வந்து ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

## தமிழ் இளைஞன் கைது

( கொழும்பு )

கொழும்பு முகத்துவாரம் பகுதியில் தனியார் வீடொன்றில் தங்கியிருந்த தமிழ் இளைஞர் ஒருவர் கடந்த 14ம் திகதி பொலிசாரினால் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் நாவாந்துறையைச் சேர்ந்த கந்தையா உதயகுமார் என்ற இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## மலையகப் பகுதிகளிலும் புலிகள் ஊடுருவலாம்

(கொழும்பு)

மலையகப் பகுதிகளில் விடுதலைப்புலிகள் எதிர்காலத்தில் தமது நடவடிக்கைகளை விரிவுபடுத்துவார்கள் என்றும் எனவே தோட்டப் பகுதிகளில் பதற்றம் ஏற்படும் அச்சுறுத்தல் இருப்பதால் மாத்தளை பகுதியிருந்த அவதானத்துடன் வைக்கப் பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்திலிருந்து விடுதலைப் புலிகளின் அணி பொன்று பதுளை, கண்டி, மாத்தளைப் பகுதிகளுக்குள் ஊடுருவி இருப்பதாக, பொலிசாருக்கு இரகசியத் தகவல் கிடைத்திருப்பதாகவும் இதனால் மிக அவதானத்துடன் செயல்படுமாறு மக்களுக்கு கோரிக்கை விடப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. முன்பின் அறிமுகம் இல்லாதவர்கள் மற்றும் சந்தேகநபர்கள் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு தோட்ட அதிகாரிகளும் பொலிசாரால் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் தம்புள்ள, மாத்தளை பிரதான பாதையில் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு வீதித் தடைகளும் போடப்பட்டிருப்பதாக வினாதீப மேலும் தெரிவித்துள்ளது.

## புறநிலைப்படிப்பு அலகினால் 2000 அதிகமானோர் பயன்

– இரா சிவச்சந்திரன்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் உந்து சக்தியினாலேயே யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் செயற்திட்ட செயன்முறை கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டது என்று புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் இரா. சிவச்சந்திரன் தெரிவித்தார்.

செயற்திட்ட செயன்முறை பயிற்சியின் இறுதிநாள் நிகழ்ச்சியின்போது உரையாற்றிய திரு. சிவச்சந்திரன் மேலும் கூறுகையில், மக்கள் பயனடையக் கூடியதான இத்திட்டத்தின் மூலம் இன்று இரண்டாயிரம் மாணவர்கள் வரையில் பயனடைந்து வருகின்றனர் எனவும், த. பொ. மே. நிறுவனத்தின் வேண்டுகோளுக்கு இணங்க இவ்வாறான கற்கை நெறி வன்னியிலும் ஆரம்பிக்கப்பட இருப்பதாகவும் தெரிவித்தார்.

இவ்வைபவத்தில் உரையாற்றிய த. பொ. மே நிறுவன பணிப்பாளர் வி. செ. பிபன் தமதுரையில், தமிழீழ தாயானவள் கூடுதலான வளங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளாள். இவ்வளங்களை முழுமையாக பயன்படுத்துவோமாயின் தன்னிறைவான தமிழீழத்தைக் கட்டியெழுப்ப முடியும். அதற்கான ஆளணிகளை உருவாக்க இத்தகைய பயிற்சிகள் அவசியம் எனவும், வன்னியிலும் இப்பயிற்சிகள் ஆரம்பிக்க வேண்டியது அவசியம் எனவும் தெரிவித்தார்.

பல்கலைக்கழக கல்விமான்கள் பலரையும் இணைத்து நீர்ப்பயன்பாடு, கடல்வளம் விலங்கு வேளாண்மை, உட்கட்டுமானம், விவசாயம் போன்ற பல துறைகளில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் பல தரப்பட்ட ஆய்வுகளை மேற்கொண்டு வருவது தெரிந்ததே.

வளங்களின் உச்சக்கட்ட பயன்பாட்டை பெற்று தமிழீழத்தின் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்கில் பொருத்தமான ஆளணியை உருவாக்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட செயற்திட்ட செயல்முறை பயிற்சி நெறியில் த. பொ. மே. நிறுவனத்தால் தெரிவு செய்யப்பட்ட 46 பேர் உட்பட பலர் பங்குபற்றினர். பல்வேறு துறைகளையும் சேர்ந்த 16 விரிவுரையாளர்களின் பங்களிப்புடன் இப் பயிற்சி நெறி

## பிரச்சினைக்கு தீர்வு காண பேச்சுவார்த்தை அவசியம்

அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர்

[கொழும்பு]

இலங்கையின் இனப் பிரச்சினைக்கு பேச்சு வார்த்தைகள் மூலமான தீர்வு காணப்படுவதன் அவசியத்தை அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் செனட்டர் கர்இவான்வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் தொடர்ந்து கொண்டிருக்கும் இனப்பிரச்சினைக்கு பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்வு காணப்படும் எனவும் அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டார்.

## அகதி முகாமில் வசிப்போர் மீளக் குடியமர மறுப்பு

(கொழும்பு)

உயிருக்கு உத்தரவாதம் இல்லையேல் மீளக் குடியமர்வதற்கு தாங்கள் தயாராக இல்லையென வாழைச்சேனை அகதி முகாமில் தங்கியுள்ள மக்கள் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரிடம்

களில் இப் பகுதிகளில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களால் இக் கிராமத்தவர்பலர் உயிரிழந்ததன் காரணமாக இவர்கள் அச்சத்தோடு இடம் பெயர்ந்தது குறிப்பிடத்தக்கது இவர்கள் வாழ்ந்து வந்த கிராமங்களுக்கு அருகே சிங்களக்

# வரலாற்றில் என்றுமில்லாத கட்டத்தில் இருக்கிறோம்

- ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா

[கொழும்பு]

வரலாற்றில் என்றும் காணப்படாத ஒரு சூழலில் நான் இப் புதிய பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறேன். எதிர்கால சவால்களுக்கு நிரந்தர முகம் கொடுக்கும் வகையில் செயற்பட வேண்டியுள்ளது என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகவும், பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராகவும் அண்மையில் பதவியேற்றுள்ள ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா தெரிவித்தார்.

திவயின என்ற சிங்கள பத்திரிகை டபிள்யூ ஜி குணரத்தின என்பவருக்கு ஜெனரல் ஹமில்டன் வனசிங்க வழங்கிய செவ்வியிலிருந்து திரட்டப்பட்ட முக்கிய அம்சங்கள் வருமாறு.

**கேள்வி:** பாதுகாப்பு செயலாளர் என்ற வகையில் நீங்கள் எதற்கு உயர்ந்த முன்னுரிமை அளிக்கிறீர்கள்?

**பதில்:** நாட்டின் ஒற்றையாட்சித் தன்மையை பாதுகாத்து நாட்டை எதிர்நோக்கியுள்ள சவால்களை முறியடித்து ஐக்கிய இலங்கையில் சமாதானத்தை நிலை நாட்டுவதையே.

**கேள்வி:** இருபது ஆண்டுகளாகத் தொடரும் இந்தப் 'பயங்கரவாதத்தை' முறியடிக்க இலகுவில் இயலுமா?

**பதில்:** எம்மீது சுமத்தப்பட்டிருக்கும் பொறுப்பு மிகப் பெரியது. வரலாற்றில் என்றும் காணப்படாத ஒருசூழலில் நாம் பயணம் செய்துகொண்டிருக்கின்றோம் வடக்கு கிழக்கு யுத்தம் இதற்கு காரணமாகும் யுத்த பூமியில் எல்லைப்பகுதியிலும் சமாதானத்துக்கு அனைவருக்கும் நாம் அர்ப்பணமாகியுள்ளோம் அதற்கு மக்களின் ஒத்துழைப்பு அவசியம்

**கேள்வி:** அதன் பிரதானமானதாக உங்கள் கீழ் உள்ள முப்படைகளுக்கும் பொலிசுக்குமா?

**பதில்:** ஆம் அந்தச் சவால்களுக்கு அச்சமின்றி தீரமாக நாமமுகம் கொடுப்போம் எமது நாட்டின் ஒற்றை ஆட்சியை நாம் பாதுகாக்க வேண்டும். வாழ்க்கைத்தியாகம் செய்வதன் மூலம் நாம் அதற்குத்தயாராக உள்ளோம்.

**கேள்வி:** தொடர்ந்து மேற்கொள்ளப்படும் இந்த யுத்தத்தில் வடக்கு கிழக்கு சாதாரண

**கேள்வி:** அண்மையில் அனுராதபுரத்துக்கு இடமாற்றப்பட்ட ஜே ஓ சி தலைமையகத்துக்குநடந்ததுஎன்ன?

**பதில்:** அது கலைக்கப்பட்டுவிட்டது அதற்குப்பதிலாகவே நடவடிக்கை இணைப்புத் தலைமை அலுவலகம் கொழும்பில் இருந்து இயங்குகிறது முப்படைத்தளபதிகள், பொலிஸ்மா அதிபர், தேசிய உளவுச் சேவைப் பணிப்பாளர் விசேட அதிரடிப் படையின் அதிகாரி இக் குழுவில் இடம் பெறுகின்றனர். இக் கூட்டங்களில் பாதுகாப்புச் செயலாளர் தலைமை வகிக்கிறார்.

**கேள்வி:** இந்தப் புதுக்குழுவின் செயற்பாடு குறித்து விளக்கலாமா?

**பதில்:** சகல உபாயத்திட நடவடிக்கைகள் ஏற்பாடு செய்தல், ஆலோசனை, உத்தரவு பிறப்பித்தல், ஒருங்கிணைந்ததான சகல தாக்குதல் நடவடிக்கைகளும் இக் குழுவின் நடவடிக்கைகளாகும். ஜனாதிபதியும் அரசும் என் மீது விசுவாசம் வைத்து இப் பணியை என்னிடம் ஒப்படைத்துள்ளனர். நாட்டுக்கு நல்ல பணியைத் தொடர்ந்தும் செய்ய எனக்கு தொடர்ந்தும் அவகாசம் கிடைத்துள்ளது.

**கேள்வி:** அண்மைக்கால நிகழ்வுகள் பலவற்றில் புலிகளுக்கு நன்மை கிடைத்துள்ளதாகத் தெரிகிறது ஜனகபுரத் தாக்குதலிலும், பருத்தித்துறைக் கடலிலும், ஒலுவிலும் கடற் படையினருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் புலிகளின் இலக்கு சரியானதாக கூறப்படுகிறது. இதுபற்றி நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?

**பதில்:** ஓரிடத்தில் வெற்றி அல்லது தோல்வி என்பது யுத்தத்தில் வெல்வதல்ல. நாம் எந்த இடத்திலும் யுத்தத்தில் தோல்வியுறவில்லை. தாக்குதல் என்றவகையில் முக்கியமான எந்த யுத்த பூமியும் எமக்கு இல்லாமல் போகவில்லை. யுத்தத்தில் இலாப நட்டங்கள் எதிர்பார்க்கப்படுவதுதான்.

**கேள்வி:** தோல்வி ஏற்பட்டால் பின்னடைவு ஏற்படுமா?

**பதில்:** உண்மையாகவே இல்லை. எங்கள் வீரர்களின் தைரியம் மிக உயர்ந்தது. தோல்வியில் நாம் கலங்குவதில்லை சோர்வு கொள்வ

இராணுவம் பற்றித் தெரியாதவர்களே. தமது சொந்தக் கையெழுத்தைக் கூட போடத் தெரியாதவர்கள் எமது அயல் நாடுகளில் இராணுவத்தில் பெருமளவில் இருப்பதை அவர்கள் தெரிந்து கொள்ளவில்லைப் போலும்.

**கேள்வி:** படையில் சேருவதற்குரிய கல்வித் தகைமை ஐந்தாம் வகுப்பில் சித்தி என்று குறைக்கப்பட்டிருக்கிறது அல்லவா?

**பதில்:** அதில் என்ன தவறு இருக்கிறது? நாட்டுக்கு சேவையாற்ற மனமுவந்து முன்வரும் பிள்ளைகளுக்கு கல்வித்தகைமை இல்லை என்று காரணம் காட்டி அந்த வாய்ப்பை மறுப்பது சரியா? நாட்டுப்பற்று கல்வி பெற்றவர்களுக்கு மட்டும்தானா இருக்கிறது

**கேள்வி:** பாதுகாப்பு படையில் உள்ளவர்கள் கடந்த 21 ஆண்டுகளிலும் பெரும் தியாகங்கள் புரிந்துள்ளனர் அல்லவா?

**பதில்:** ஆம். நாட்டுக்காக அதே தியாகங்களைப் புரிந்த பலர் எம்மிடம் இருக்கின்றனர் சிலர் எம்மிடையே இல்லை சிலருக்குகை, கால்கள் இல்லை. இத்தகைய வீரர்களையும் அவர்களது சொந்தங்களையும் உடன்பிறப்புக்களையும் எம்மால் என்றும் மறக்க முடியாது என்றும் தெரிவித்தார்

## உடற்கல்விக்கு ஆசிரிய ஆலோசகர் இல்லை

உடற்கல்வித் துறைக்கு ஆசிரிய ஆலோசகர்கள் நியமிக்கப்படாமையால் பாடசாலைகளில் உடற் கல்வித்துறை சீர்குலைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ் மாவட்டத்தில் ஆறு கோட்டங்கள் அமைக்கப்பட்டு அவற்றின் மூலம் பாடசாலைகள் நிர்வகிக்கப்பட்டு வந்த போதும் ஒரு கோட்டத்திலாவது உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் நியமிக்கப்படாதது பெரும் குறையாகவே கருதப்படுகிறது.

ஏனைய பாடங்களுக்கு கோட்டரீதியாக ஆசிரிய ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டிருப்பது போன்று உடற்கல்விக்கும் ஆசிரிய ஆலோசகர்கள் நியமிக்கப்பட வேண்டுமென அதிபர்கள் பலர் கேட்டுக் கொள்கின்றனர்.

## சான்றிதழ் வழங்கல்

யாழ் பல்கலைக்கழகத்தில் ஆரம்பித்து நடைபெற்ற தொழிலாளர் கற்கைநெறியின் இரு அமர்வுகளில் சித்தியடைந்தோருக்கான சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் யாழ் பல்கலைக்கழகத்தில் ஒக்டோபர் மாதம் 2ஆம் திகதி நடைபெற உள்ளதாக தொழிலாளர் கற்கைநெறியின் இணைப்பாளர் திரு.மா சின்னத்தம்பி அவர்கள் தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவத்தை தொடர்ந்து இப் பரீட்சையில் சித்தியடைந்தோர்களுக்கு வருகிற தை மாதம் தொடக்கம் தொழிலாளர் கற்கை நெறியின் டிப்ளோமா வகுப்புக்களை ஆரம்பித்து நடத்துவதற்கான நடவடிக்கைகளை யாழ் பல்கலைக்கழகம் மேற்கொண்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(17)

## தியாக நெருப்பு



அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர்

[கொழும்பு]

இலங்கையின் இனப் பிரச்சினைக்கு பேச்சு வார்த்தைகள் மூலமான தீர்வு காணப்படுவதன் அவசியத்தை அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் செனட்டர் கரீஇவான்ஸ்வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் தொடர்ந்து கொண்டிருக்கும் இனப்பிரச்சினைக்கு பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்வு காணப்படும் எனவும் அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டார்.

# அகதி முகாமில் வசிப்போர் மீளக் குடியமர மறுப்பு

(கொழும்பு)

உயிருக்கு உத்தரவாதம் இல்லையேல் மீளக் குடியமர்வதற்கு தாங்கள் தயாராக இல்லையென வாழைச்சேனை அகதி முகாமில் தங்கியுள்ள மக்கள் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரிடம் தெரிவித்துள்ளனர்.

கொழும்பிலுள்ள புனர்வாழ்வு அமைச்சின் அதிகாரிகள் மற்றும், நொராட் நிறுவனத்தின் வெளிநாட்டுப் பிரதிநிதி ஆகியோருடன் அகதி முகாமிற்கு சென்ற மாவட்ட அரசாங்க அதிபரிடம் இம் மக்கள் தமது நிலைப்பாட்டை தெரிவித்தனர்.

புனானை வடமுனை ஊத்துச்சேனை போன்ற கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இடம்பெயர்ந்து வாழைச்சேனை அகதி முகாமில் வசித்து வருகின்றனர். கடந்த காலங்களில் இப் பகுதிகளில் இடம் பெற்ற தாக்குதல் சம்பவங்களால் இக் கிராமத்தவர்பலர் உயிரிழந்ததன் காரணமாக இவர்கள் அச்சத்தோடு இடம் பெயர்ந்தது குறிப்பிடத்தக்கது. இவர்கள் வாழ்ந்த தக்கிராமங்களுக்கு அருகே சிங்களக் குடியேற்றங்களும் முஸ்லிம் கிராமங்களும் இருக்கின்றன.

சிறிலங்கா இராணுவத்தினர் நடத்திய மயிலியதனைப் படுகொலையில் தனது கணவனை இழந்த யுவதி ஒருவர் "கலவரத்தினால் எமது சொந்த பந்தங்களை இழந்து நிற்கின்றோம் எனது கணவனையும், பிள்ளைகளையும், மற்றும் சொந்த பந்தங்களையும் இழந்த காட்சியை நான் நேரில் சந்தித்துள்ளேன்" என்று கண்ணீர் மல்கத் தெரிவித்தது அங்கிருந்த அனைவரையும் மனமுருகச் செய்தது.

# இளாலி கடற்பரப்பில் பீரங்கித் தாக்குதல்

## பயணிகளுக்கு சேதமில்லை

(தென்மராட்சி)

கடந்த வெள்ளி இரவு இளாலியில் இருந்து ஆலங்கேணி கரையை நோக்கி பயணம் செய்த பயணிகள் மீது கடற்படையினர் பீரங்கித்தாக்குதலை நடத்தினர். இரவு 8 45 மணியளவில் நடத்தப்பட்ட இத் தாக்குதலினால் சேதம் ஒன்றும் ஏற்படவில்லை என்றும் பயணிகள் தமது பயணத்தை தொடர்ந்ததாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (86)

# கட்டிடத் தொழிலாளருக்கு வறுமைநிவாரணம் வழங்குக

## பிரதேச செயலரிடம் கோரிக்கை

(பருத்தித்துறை)

நிறுத்தப்பட்டுள்ள சீமெந்து கட்டிடத் தொழிலாளர்களுக்கான வறுமை நிவாரணக் கொடுப்பனவுகளை மீண்டும் வழங்கி இச் சீமெந்து கட்டிட தொழிலாளர்களுக்கு விமோசனம் வழங்க வேண்டுமென சீமெந்து கட்டிட தொழிலாளர் சங்க பருத்தித்துறைகிளையும், கரவெட்டி கிளையும் அவ்வப்பகுதி பிரதேச செயலர்களைக் கேட்டுள்ளது.

இராணுவ அனர்த்தங்களினால் தொழிலிழந்த சீமெந்து கட்டிட தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணக் கொடுப்பனவுகள் 1 3 93 தொடக்கம் நிறுத்தப்பட்டமையினால் இக் குடும்பங்கள் வறுமையில் வாடி பெரும் இன்னல்களை அனுபவித்து வருவதனால் இவர்களுக்கான நிவாரணக் கொடுப்பனவுகளைத் தொடர்ந்தும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என இச் சங்கத்தினர் பிரதேச செயலர்களிடம் கேட்டுக் கொண்டுள்ளனர். பிரதேச செயலர்கள் இத் தொழிலாளர்களின் கோரிக்கை சம்பந்தமாக யாழ் அரச அதிபருடன் தொடர்பு கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

வர்த்தக வேளாண்மை, உட்கட்டுமானம், விவசாயம் போன்ற பல துறைகளில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் பல தரப்பட்ட ஆய்வுகளை மேற்கொண்டு வருவது தெரிந்ததே.

வளங்களின் உச்சக்கட்ட பயன்பாட்டை பெற்று தமிழீழத்தின் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்கில் பொருத்தமான ஆளணியை உருவாக்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட செயற்திட்ட செயல்முறை பயிற்சி நெறியில் த.பொ.மே. நிறுவனத்தால் தெரிவு செய்யப்பட்ட 46 பேர் உட்பட பலர் பங்குபற்றினர். பல்வேறு துறைகளையும் சேர்ந்த 16 விரிவுரையாளர்களின் பங்களிப்புடன் இப் பயிற்சி நெறி நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## பத்திரிகைக் கலை வகுப்புகள் ஆரம்பம்

யாழ் பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகினால் பத்திரிகைக்கலை கற்கை நெறியின் ஆரம்ப வகுப்புக்கள் நேற்று முன்தினம் யாழ் பல்கலைக்கழக வர்த்தக முகாமைத்துவ மண்டபத்தில் ஆரம்பமாகியது.

ஆரம்ப நிகழ்ச்சி யாழ்.பல்கலைக்கழக புறநிலைப்படிப்பு இணைப்பாளர் திரு. இரா. சிவசந்திரன் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் திரு. பாலசுந்தரம்பிள்ளை கலந்துகொண்டு உரைநிகழ்த்தினார். சிறப்பு விருந்தினர்களாக உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர், ஈழநாதம் பத்திரிகையின் பிரதம ஆசிரியர், ஈழநாடு பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆகியோரும் கலந்து கொண்டு உரைநிகழ்த்தினார்கள்.

ஆரம்பவைபவத்தை தொடர்ந்து முதல்நாள் விரிவுரைகள் பி.ப 4 30 மணிக்கு ஆரம்பமாகியது. இக்கற்கை நெறியைத்தொடர யாழ் பல்கலைக்கழக புறநிலைப் படிப்பு அலகினால் விண்ணப்பம் கோரப்பட்டுகுமார் நூற்றிநாற்பது மாணவமாணவிகள் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (17)

## 'ஆணிவேர்' நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

ஏழாலை கொத்தணி விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பின் 'ஆணிவேர்' எனும் நூல் வெளியீட்டு விழா இன்று முற்பகல் 11 30 மணிக்கு ஏழாலை மகா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

படுகின்றோம் வடக்கு கிழக்கு யுத்தம் இதற்குக் காரணமாகும் யுத்த பூமியில் எதிர்ப்புகளை பலவீனப்படுத்தி சமாதானத்துக்கு அணிவகுக்க நாம் அர்ப்பணமாகியுள்ளோம் அதற்கு மக்களின் ஒத்துழைப்பு அவசியம்

கேள்வி: அதன் பிரதானசவால் உங்கள் கீழ் உள்ள முப்படைகளுக்கும் பொலிசுக்குமா?

பதில்: ஆம் அந்தச் சவால்களுக்கு அச்சமின்றி நேரமாக நாமமுகம் கொடுப்போம். எமது நாட்டின் ஒற்றை ஆட்சியை நாம் பாதுகாக்க வேண்டும். வாழ்க்கைத்தியாகம் செய்வதன் மூலம் நாம் அதற்கு தயாராக உள்ளோம்.

கேள்வி: தொடர்ந்து மேற்கொள்ளப்படும் இந்த யுத்தத்தில் வடகிழக்கு சாதாரண மக்களை வெற்றி கொள்ளும் முயற்சி இல்லையா?

பதில்: படையினர் தொடர்ந்தும் போரில் ஈடுபட்டுள்ளனர். ஆயுதம் ஏந்தியவர்களுடன் போராடும் அதே வேளையில் வடகிழக்கில் பயப்படும் இளைஞர்களின் மனங்களை வெல்வதற்கும் நாம் முயல்கின்றோம்

கேள்வி: இதுவரை இயங்கிய ஜே ஓ சியின் பணிகள் தற்போது யார் வசம்?

பதில்: பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைகள் இணைப்பு தலைமையகத்திடம் அது தொடர்ந்தும் உள்ளது

தாக்குதலில் புலிகளின் இலக்கு சரியானதாக கூறப்படுகிறது. இதைபற்றி நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?

பதில்: ஓரிடத்தில் வெற்றி அல்லது தோல்வி என்பது யுத்தத்தில் வெல்வதல்ல. நாம் எந்த இடத்திலும் யுத்தத்தில் தோல்வியுறவில்லை. தாக்குதல் என்றவகையில் முக்கியமான எந்த யுத்த பூமியும் எமக்கு இல்லாமல் போகவில்லை. யுத்தத்தில் இலாப நட்டங்கள் எதிர்பார்க்கப்படுவதுதான்.

கேள்வி: தோல்வி ஏற்பட்டால் பின்னடைவு ஏற்படுமா?

பதில்: உண்மையாகவே இல்லை. எங்கள் வீரர்களின் தைரியம் மிக உயர்ந்தது. தோல்வியில் நாம் கலங்குவதில்லை சோர்வு கொள்ளவில்லை. எங்களுடைய தியாகபூர்வமான பேச்சு மென்மேலும் அதிகரிக்கின்றது. யுத்த களத்தில் உயிர்த்தியாகம் புரிந்த வீரர்களின் மூலம் மேலும் உத்வேகம் பெற்று நாம் முன்னேறுகின்றோம்.

கேள்வி: அண்மையில் இராணுவத்தில் ஆட்களைச் சேர்ப்பதற்கான கல்வித்தகைமை, வயது என்பன குறைக்கப்பட்டது தொடர்பாக சிலர் விமர்சிக்கின்றனரே. இது நியாயமா?

பதில்: இது எவ்வகையிலும் நியாயமானதல்ல அவ்வாறு பேசுபவர்கள் உலகில்

## கைபோயிட் நோய் பரவல்

# இரு மாதங்களில் மட்டும் 175 பேருக்கு சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா மருத்துவமனையில் கடந்த இரண்டு மாதங்களில் டைபோயிட் நோய்கண்ட 175பேர்சிகிச்சை பெற்றுள்ளனர்.

ஜூலைமாதம் 59பேரும் ஆகஸ்ட் மாதம்116 பேரும்சிகிச்சை பெற்றுள்ளனர் ஜூலைமாதத்திலும் பார்க்க ஆகஸ்ட் மாதம் பெருமளவானோர் சிகிச்சை பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இம்மாதம் இதுவரை டைபோயிட் நோய் கண்ட 26 பேர் சிகிச்சை பெற்றுள்ளார்கள். (இ)

# நீர்கொழும்பு பகுதியிலும் பொலிசார் தேடுதல்

(கொழும்பு)

நீர்கொழும்பு பகுதியில் பொலிசாரும், அதிரடிப்படையினரும் சுற்றி வளைத்து கடும் தேடுதலில் ஈடுபட்டனர். கிழக்கு மாகாணப் பகுதியிலிருந்து வந்த கரும்புலிகள் சிலர் இப் பகுதியில் தங்கியிருக்கலாம் எனத்தகவல் கிடைத்ததைத் தொடர்ந்தே இத் தேடுதல் வேட்டை நடத்தப்பட்டதாகப் பொலிசார் கூறினர். நீர்கொழும்பு கரையோர பகுதியில் தமிழர்களுக்கு வாடகைக்கு கொடுக்கப்பட்டுள்ள எழுபது வீடுகள் முற்றுகைக்கு உள்ளாக்கப்பட்டதாகவும். இங்கிருந்து சுமார் நூற்றி ஐம்பதுக்கும் அதிகமானோர் விசாரிக்கப்பட்டனர் எனவும் கூறப்படுகிறது.

## ஒத்திவைப்பு

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட சங்கீத ஆசிரியர்களுக்கு இம்மாதம் 25ஆம் திகதி சனிக்கிழமை நடாத்தப்படவிருந்த சேவைக்காலப் பயிற்சி வகுப்பு தவிர்க்க முடியாத காரணங்களினால் பின்போடப் பட்டுள்ளது என்பதை பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டச் சங்கீத ஆசிரிய ஆலோசகர் சங்கீத பூஷணம் வீ கே. நடராசா தெரிவித்துள்ளார்.

## தியாக நெருப்பு



திலீபன் என்றொரு தியாக நெருப்பு - எட்டுத்
திசையெங்கும் வாழ்பவர் போற்றிடும் பிறப்பு
ஐந்து அம்சக் கோரிக்கை வழியிலே
அகிம்சை வழிக்கு புது அர்த்தமே சொன்னவன்
வெந்து போன தமிழருக்காகவே - இந்த
வீணை நரம்புகள் அறுந்து போனது
ஈழ மண்ணிலே இந்தியர் சேனை இருப்பதும்
எரியும் நெருப்பிடை தமிழர் வாழ்வது - இந்த
தேசம் எரிவதைப் பார்த்து பொறாது - எம்
தேவன் திலீபன் தீயில் இறங்கினான்.

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்

(சி/7450)

# நினைவு கூருகின்றோம் ... 1993-09-20

1985ஆம் ஆண்டு இகேதினத்தில் எமைப்பிரிந்த-

★ சோமசுந்தரம் சுந்தரலிங்கம் (மட்டு)

1986ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

வசந்தன் (கு. பாலேஸ்வரன் — — —)

1987ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினரின் நடவடிக்கையின் பின் வவுனியா செட்டிப்புலவு என்னும் பகுதியில் சடலங்களாக மீட்கப்பட்ட 02 தமிழர்கள்.

1990ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய-

கண்ணன் (கனகசபாபதி பரமானந்தன் — —)

1991ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

சூரியா (யோகேஸ்வரி அம்பலவாணபிள்ளை - மூதூர்-திருமலை)

வெற்றிலைக்கேணி முகாமிலிருந்து ஆழியவளைக்கு வந்த சிறிலங்காப்படையினரால் வெட்டியும், சுட்டும் கொல்லப்பட்ட குடும்பதலைவர்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

✶ இக்குறிப்பிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[இ-7448]

சிந்தனைக்கு

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

–தமிழ்ப்பழமொழி


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 20-09-1998
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05


## சுகாதாரம் பேணுதல் அவசியமாகிறது

யாழ். மாநகரப் பகுதியில் 'கொலரா' நோய் கண்டிருப்பதாக வைத்திய அதிகாரிகளினால் சந்தேகிக்கப்படுகின்றது. இரண்டுபேர் வயிற்றோட்டத்தினால் மரணமடைந்ததைத் தொடர்ந்தும், எட்டுப்பேர் பாதிப்பிற்கு உள்ளானதைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளைத் தொடர்ந்து அதிகாரிகள் இம்முடிவிற்கு வந்துள்ளனர்.

இந்நோய் பற்றி திட்டவட்டமான அறிவிப்புக்களை அதிகாரிகள் செய்ய முடியாத வேளையிலும், தென்மராட்சிப் பகுதியில் மீண்டும் கொலரா நுண்கிருமிகள் பரவுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாக உலக சுகாதார நிறுவனம் எச்சரித்ததைத் தொடர்ந்தும், யாழ்ப்பாணத்தில் கடந்த மூன்று வருடகாலமாக சுகாதார நடவடிக்கைகளை பெரியளவில் பேணமுடியாமல் போனமையும் மற்றும் சனநெரிசல், இடம்பெயர்வு, போசாக்கின்மை என்பனவற்றையும், கருத்திற் கொண்டும் ஏற்பட்டுள்ள வயிற்றோட்ட நோய், கொலரா நோயாக இருப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகம் என நோய் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

போதிய ஆய்வு கூட வசதிகள் இல்லாமை, நோய்பற்றிய ஆய்வு ரீதியான முடிவை தெளிவாக முன்வைப்பதில் சில சிரமங்களை ஏற்படுத்தி இருப்பினும், வைத்திய அதிகாரிகளின் இவ் அறிவிப்பானது, பொறுப்புள்ள ஒரு நடவடிக்கை என்றே கூறலாம். ஆய்வு முடிவுகளில் சில தடங்கல்கள் இருப்பினும், நோயைப்பற்றி முன்னெச்சரிக்கை விடுவதும், தற்காப்பு நடவடிக்கைகளைப் பேணுமாறு வற்புறுத்துவதிலும் தவறொன்றும் இல்லை.

ஏனெனில், தமிழ் மக்களின் நிலை இன்று அவ்வாறே உள்ளது. சிறிலங்கா அரசாங்கம் மேற்கொண்டுள்ள எரிபொருள், மருந்துப் பொருள் மற்றும் பொருளாதாரத் தடையினால், தமிழ்மக்கள் பெருமளவில் பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர். அதிலும், இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்துள்ள மக்கள் பெரும் துன்பத்தை அனுபவித்தும் வருகின்றனர் இவர்கள் போசாக்கின்மையாலும், சுகாதாரச் சீர்கேட்டாலும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். [illegible]

## பாரடா பாரதமே

பாரடா பாரதமே
பார்த்தீபனின் பரிதவிப்பை
ஓ உன்னிடம் தான் இல்லையே
ஈவு, இரக்கம் ஒன்றும் இல்லாது
பாரட்டுக்கள் பெற வந்த பாரதமே
பார்த்தீபன் பணிந்துவிடுவான் என்று
பரப்பி நின்றாயே – ஆனால்
பாருலகம் வியக்குமளவிற்கு
காட்டிவிட்டான் அகிம்சையைப் பார்த்தீபன்.

உலகிற்கு காட்டுவதற்காக உணவு
போட்டும் உணவின்றி எங்கள்
பார்த்தீபனின் உயிர் பிரிகையிலும்
பாசமுடன் அணைத்த மக்களின் முன்
பேச நா எடுத்தபோதும் பேச்சிழந்து
பார்த்தீபன் பட்ட வேதனையை பாரடா
பாரதமே

எங்கள் முன் சூறாவளியாகச் சுழன்றவன்
சுருண்டு துடிப்பதை சூழவுள்ள மக்கள்
பார்த்துக் கதறியழுவதையும் பாரடா
பாரதமே
எங்கள் நிலைகள் அழிந்தாலும் – எம்
பார்த்தீபனின் நினைவுகள் அழியாதது.

– சிலம்பு

தமிழக மீனவர் விவகாரம் தொடர்பாக

## சிறிலங்காவிடம் நட்டஈடு இந்தியா கோரியுள்ளது

(கொழும்பு)

அண்மையில் சிறிலங்கா கடற்படையினரால் இந்திய மீன்பிடிப்படகு தாக்கப்பட்டு அதில் இருந்த ஒருவர் உயிரிழந்தமைக்கு சிறிலங்கா நட்டஈடு தரவேண்டுமெனபுதுடில்லி கொழும்பிடம் கோரியுள்ளது.

கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் நரேஸ்வர் தயாள் அண்மையில் சிறிலங்காவின் வெளிநாட்டுச் செயலாளர் பேர்னாட் திலகரத்தினாவைச் சந்தித்த போதுஇக்கோரிக்கை விடப்பட்டதாக தெரியவருகிறது.

இதேவேளை தமிழ்நாட்டில் விரைவில் நடக்கவிருக்கும் இடைத் தேர்தல்களின் போது பாக்கு நீரிணையில் மீன்பிடிப்பதற்கு சிறிலங்கா விதித்துள்ள தடைஉத்தரவினால் பாதிப்புகள் ஏற்படக் கூடாது என்று புதுடில்லி விரும்புவதாகவும் தெரியவருகிறது.

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத

# இடங்களில் வாழ்பவருக்கு உதவி தொ. நிறுவனங்கள் வழங்க கூடாது

– பிரிகேடியர் ரொஹான் குணவர்த்தன

(கொழும்பு)

இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்படாத பகுதிகளுக்கு தொண்டர் நிறுவனங்கள் உதவி எதுவும் வழங்கக் கூடாது என்று மட்டக்களப்பு மாவட்ட இராணுவ இணைப்பதிகாரி பிரிகேடியர் ரொஹான் குணவர்த்தன தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் நிவாரண உதவிகள் குறித்து ஆராய்வதற்காக பாதுகாப்பு இணைப்பதிகாரியினால் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டம் அண்மையில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க செயலகத்தில் நடைபெற்றது. அதில் உரைநிகழ்த்திய பிரிகேடியர் ரொஹான் குணவர்த்தன மேலும் கூறுகையில், மட்டக்களப்பில் மீன்பிடித் தொழில் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கூறுவதில் எதுவித நியாயமும் இல்லை.பாதுகாப்பு நிலைகளில் இருந்து நூறு யார் தூரம் வரையிலுமே மீன்பிடிப்புக்கு தடை உள்ளது. கல்லடி வாவியிலும் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை மீன் பிடிக்கலாம். ஆழ்கடல் மீன்பிடியும் தங்கு தடையின்றி நடக்கிறது. எனவே மீன்பிடித் தொழில் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கூறுவதில் நியாயம் இல்லை எனவும் தெரிவித்தார்.

அத்துடன் நிவாரணப்பணிகளை மேற்கொள்ள அரசிடம் நிதிவசதி இருக்கிறது. நாட்டின் தற்போதைய நிலையையும் தொண்டர் அமைப்புகள் அறிந்து வைத்திருக்க வேண்டும். வீடு கட்டுவதற்காக வழங்கப்படும் 15 ஆயிரம் ரூபா பணம் போதுமானதாக இல்லை இதற்கு தொண்டர் நிறுவனங்கள் உதவலாம். மீனவ குடியமரும் மக்கள் தமது வாழ்க்கை நிலையை ஆரம்பிப்பதைக் கவனிப்பது பெரும் பிரச்சினையாக உள்ளது. எனவே மீன்பிடி, விவசாயம், வியாபாரம் போன்ற துறைகளில் அவர்களுக்கு உதவ முடியும் எனவும் தெரிவித்தார்.

## அரசாங்கத்துடன் இணையும் நோக்கம் எமக்கில்லை

ஐ. ஐ. தே. முன்னணி செயலாளர்

(கொழும்பு)

சில அமைச்சர்களாலும் ஆளும்கட்சியினராலும் பத்திரிகைகளாலும் கூறப்படுவது போல ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளவும் மாட்டாது. அமைச்சரவைப் பொறுப்புகளை நாமோ காமினி திசாநாயக்காவோ ஏற்றுக் கொள்ளவும் போவதில்லை என்று முன்னணியின் பொதுச் செயலாளர் ஜி எம். பிரேமச்சந்திர கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; ஐ. தே. கவுடன் கைகோர்த்துக் கொண்டு அவர்களுக்கு 'சேவகம்' செய்ய நாங்கள் தயாராக இல்லை பதிலுக்கு பொது மக்கள் ஐக்கிய முன்னணியோடும் இதுபோன்ற இதர கட்சிகளோடும் இணைந்து செயற்படுவது பற்றியே சிந்திக்கின்றோம் எனவும் தெரிவித்தார்.

எமது முன்னணி இணையப் போவதாகவும், அமைச்சரவை பதவிகளை ஏற்கப் போவதாகவும் கூறப்படுவது எல்லாம் வீண்புரளி என்றும் முன்னணியை பலவீனப்படுத்த ஆளும் கட்சி மேற்கொள்ளும் தந்திரம் என்றும் குறிப்பிட்டார்.

முன்னணி அதன் தலைவர் காமினிதிசாநாயக்காவிற்கு தேசியப் பிரச்சினைகள்தொடர்பாக அரசுடனும்பொறுப்பில் இருப்பவர்களுடனும் பேச்சு நடத்த அனுமதி வழங்கியுள்ளபோதும், இணைப்பு தொடர்பான விடயங்கள் குறித்து பேசப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

எனினும் வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு நீடித்த நிரந்தர தீர்வு காண்பது தொடர்பாகவும்இது போன்ற தேசியப்பிரச்சினைகள் தொடர்பாகவும் அரசுக்கு ஒத்துழைப்பு நல்க முன்னணி தயாராக இருக்கின்றது. ஆயினும் அமைச்சரவைப் பொறுப்புகளை முன்னணி சார்பாக எவரும் ஏற்கப் போவதில்லை எனவும் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

# ராணிப்பேட்டை தொகுதியில் அ.தி.மு.க-பா.ம.கட்சிமோதல்

(சென்னை)

ராணிப்பேட்டை தேர்தல் தொகுதியில் பாட்டாளி மக்கள் கட்சியின் வேட்பாளர் இளவழகனும், அவரது ஆதரவாளர்களும் அ. இ. அ. தி.மு. க வினராலும், பொலிசாராலும் தாக்கப்பட்டனர். இதனைத் தொடர்ந்து பாட்டாளி மக்கள் கட்சியினர் சாலை மறியில் ஈடுபட்டதுடன் அ.இ. அ. தி. மு. கவினரின் பிரசார ஊர்தி ஒன்றையும் அடித்து நொருக்கியுள்ளனர். அத்துடன் அ. இ. அ. தி. மு. கவின் அலங்கார வளைவுகள், கட் அவுட்டுகள், கொடிக் கம்பங்கள் என்பன வெட்டி வீழ்த்தப்பட்டதாகவும் கூறப்படுகி [illegible]

பழநி மக்களவைத் தேர்தலில்

## மாநில அமைச்சர் குறுக்கீடு

## தலைவர் கருணாநிதி மீது திட்டமிட்டே தாக்குதல்

தி.மு க. பொதுச் செயலாளர்.

(சென்னை)

ராணிப்பேட்டை தொகுதியில் தி. மு. க. தலைவர் கருணாநிதியின் மீது நடாத்தப்பட்ட தாக்குதல் திட்டமிடப்பட்டு நடாத்தப்பட்டதாக தி மு க பொதுச் செயலாளர் க. அன்பழகன் தெரிவித்தார்.

சென்னையில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் மேலும் தெரிவிக்கையில், மத்திய அரசு இதவிடயத்தில் உடனடியாக தலையிட்டு [illegible] வர் தி.மு கவின் வான்ஒன்றை எரித்ததாகவும், ஒட்டன் சத்திரத்தில் மாநில அமைச்சர் கள் சிலரால் தி.மு க ஆதரவாளர்கள் தாக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் குடியரசுத்தலைவர், பிரதமர், உள்துறை அமைச்சர் ஆகியோருக்கு இது பற்றி அவசரத் தந்தி மூலம் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் இச் சம்பவங்கள் மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு நிலைமையின் [illegible]

போதிய ஆய்வு கூட வசதிகள் இல்லாமை, நோய்பற்றிய ஆய்வு ரீதியான முடிவை தெளிவாக முன்வைப்பதில் சில சிரமங்களை ஏற்படுத்தி இருப்பினும், வைத்திய அதிகாரிகளின் இவ் அறிவிப்பானது, பொறுப்புள்ள ஒரு நடவடிக்கை என்றே கூறலாம். ஆய்வு முடிவுகளில் சில தடங்கல்கள் இருப்பினும், நோயைப்பற்றி முன்னெச்சரிக்கை விடுவதும், தற்காப்பு நடவடிக்கைகளைப் பேணுமாறு வற்புறுத்துவதிலும் தவறொன்றும் இல்லை.

ஏனெனில், தமிழ் மக்களின் நிலை இன்று அவ்வாறே உள்ளது. சிறிலங்கா அரசாங்கம் மேற்கொண்டுள்ள எரிபொருள், மருந்துப் பொருள் மற்றும் பொருளாதாரத் தடையினால், தமிழ்மக்கள் பெருமளவில் பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர். அதிலும், இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்துள்ள மக்கள் பெரும் துன்பத்தை அனுபவித்தும் வருகின்றனர் இவர்கள் போசாக்கின்மையாலும், சுகாதாரச் சீர்கேட்டாலும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பெரும்பாலும் நிவாரணப் பொருள்களையே அடிப்படையாகக் கொண்டு வாழும் இம்மக்கள், நீர், மற்றும் மலசலகூட வசதி ஆகிய இரு விடயங்களிலும் பெரும் இன்னல்களை எதிர்கொள்கின்றனர். சில இடங்களில் இவை தொடர்பாக மேற்கொண்டுள்ள ஏற்பாடுகள் கவலை அளிப்பதாகவும், அதேவேளை, அருவருக்கத்தக்கதாகவும் உள்ளன. இவை சுகாதாரத்திற்குப் பெரும் கேடு விளைவிப்பனவாகவும் உள்ளன.

மேலும், இவ்வாறானதொரு கொடிய நோய் பரவுமானால், அதனை உடனடியாகத் தடைசெய்வதற்குரிய போதிய வசதிகள் பிரதேச சுகாதார சேவைகள் திணைக்களத்திடம் இல்லை. நோயைக் கண்டறிவதற்கு ஆய்வுகூட வசதிகள் இல்லாமை மட்டுமல்ல, பெருமளவில் நோய் பரவுமானால் அதற்கான மருந்தும் இங்கு பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்புக்கள் இல்லை. அதேவேளை, சிறிலங்கா அரசாங்கம் உடன் மருந்தனுப்பிவைக்கும் என்றோ அவ்வாறு அனுப்பிவைத்தாலும் அவை உடன் யாழ். வந்து சேருமா என்பதும் சந்தேகமே.

அதாவது, பல மாதங்களுக்கு முன்னர், பிரிட்டனில் இருந்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பவைக்கப்பட்ட வைத்திய உபகரணங்களை அனுப்பிவைக்காது சிறிலங்கா அரசு இழுத்தடித்து வருகின்றது. இவ் இழுத்தடிப்பானது திட்டமிட்ட ஒரு நடவடிக்கையாகும், தான் செய்ய வேண்டியதை செய்யாதது மட்டுமல்ல, பிறர் செய்வதையும் தடுப்பதில் அரசு அக்கறையாகவுள்ளது. எவ்வாறேனும், தமிழ்மக்களை அழித்து விடுவதே நோக்கமாகக் கொண்டு செயற்படும் சிறிலங்கா அரசு கொலராபோன்ற கொடிய நோய்களை தடை செய்ய விரைந்து செயற்படும் என எவ்வாறு எதிர்பார்க்கமுடியும்?

இந்நிலையில், வைத்திய அதிகாரிகளின் எச்சரிக்கையைக் கருத்திற் கொண்டு மக்கள் செயற்படுவதே சிறப்பானதாகும். நோய்களில் இருந்து தப்புவதற்கான பாதுகாப்பு முயற்சிகள் ஒருபோதும் கேடுவிளைவிக்கக் கூடியனவல்ல. மாறாக, சுகாதார வாழ்வை பரவச் செய்து மக்களின் ஆரோக்கியத்திற்கு வழிவகுக்க கூடியதே ஆகும். ஆகையினால், வைத்திய அதிகாரிகளின் அறிவிப்புக்களை ஏற்று சுத்தம் பேணும் நடவடிக்கையில் மக்கள் இறங்கி தம்மையும் காத்து பிறரையும் காக்கும் பணியில் ஈடுபடுதல் தமக்கு மாத்திரமல்ல, முழு தமிழினத்திற்கும் செய்யும் நன்மை ஆகும்.

அண்மையில் சிறிலங்காவின் வெளிநாட்டுச் செயலாளர் ... புதுடில்லி விரும்புவதாகவும் தெரியவருகிறது.

எமது முன்னணி இணையப் போவதாகவும், அமைச்சரவை ... போவதில்லை எனவும் திட்டவட்டமாகத் தெரிவித்தார். ... உதவ முடியும் எனவும் தெரிவித்தார்.

# ராணிப்பேட்டை தொகுதியில் அ.தி.மு.க-பா.ம.கட்சி மோதல்

(சென்னை)

ராணிப்பேட்டை தேர்தல் தொகுதியில் பாட்டாளி மக்கள் கட்சியின் வேட்பாளர் இளவழகனும், அவரது ஆதரவாளர்களும் அ.இ.அ.தி.மு.கவினராலும், பொலிசாராலும் தாக்கப்பட்டனர். இதனைத் தொடர்ந்து பாட்டாளி மக்கள் கட்சியினர் சாலை மறியில் ஈடுபட்டதுடன் அ.இ.அ.தி.மு.கவினரின் பிரசார ஊர்தி ஒன்றையும் அடித்து நொருக்கியுள்ளனர். அத்துடன் அ.இ.அ.தி.மு.கவின் அலங்கார வளைவுகள், கட் அவுட்டுகள், கொடிக் கம்பங்கள் என்பன வெட்டி வீழ்த்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இச்சம்பவங்களைத் தொடர்ந்து அப்பகுதியில் பதற்றம் ஏற்பட்டதாயினும் மாவட்ட ஆட்சித் தலைவரும், காவல்துறை உயர் அதிகாரிகளும் மேற்கொண்ட நடவடிக்கைகளை அடுத்து நிலைமை வழமைக்குத் திரும்பியதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை தேர்தல் பிரசாரத்திற்காக முதல்வர் ஜெயலலிதா வந்தபோது அவருக்கு வழி ஏற்படுத்திக் கொடுப்பதற்காக பாட்டாளி மக்கள் கட்சியின் வேட்பாளர் இளவழகனும், அவரது ஆதரவாளர்களும் தடுக்கப்பட்டதாகக் காவல் துறையினர் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளனர்.

பழநி மக்களவைத் தேர்தலில்

## மாநில அமைச்சர் குறுக்கீடு அறிக்கைசமர்ப்பிக்கபணிப்பு

(சென்னை)

பழநி மக்களவைக்கான இணைத் தேர்தலில் மாநில அமைச்சர்கள் தேர்தல் நடவடிக்கைகளில் அநாவசியமாகத் தலையிடுவது தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்கும்படி மாநில தலைமைச் செயலாளர் டி. பி. வெங்கட்ராமனுக்கு மாநில ஆளுநர் டாக்டர் எம். சென்னாரெட்டி பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்துடன் நிலைமையைக் கட்டுப்படுத்தவும், நியாயமான முறையில் தேர்தல்களை நடத்தவும் காவல் துறையினர் நடவடிக்கைஎடுக்கவேண்டும் எனவும் ஆளுநர் தமது பணிப்புரையில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பழநி தொகுதியில் மாநில அமைச்சர்கள் பலரும் முகாமிட்டு இருப்பதாகவும், அவர்கள் தேர்தல் நடவடிக்கைகளில் குறுக்கிடுவதாகவும், அ.இ.அ.தி.மு.க.வினர் பெருமளவில் இப்பகுதியில் குவிக்கப்படுவதாகவும், காவல் துறையினர் புகார்களின் மீது நடவடிக்கை எடுப்பதை மாநில அமைச்சர்கள் தடுத்து வருவதாகவும் மாநில எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் தொலைபேசிமூலம் தெரிவித்திருப்பதாக ஆளுநர் தமது பணிப்புரையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

## வன்முறையைத் தூண்டுவோர் எதிர்க்கட்சியினர் தான்
### –ஜெயலலிதா தெரிவிப்பு

(சென்னை)

பழநி. மற்றும் ராணிப்பேட்டை இடைத்தேர்தல்களின் போது தோற்றுப் போய் விடலாம் என்ற அச்சத்தின் காரணமாக தி. மு. க. மற்றும் பாட்டாளி மக்கள் கட்சித் தொண்டர்கள் வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டிருப்பதாக தமிழக முதல்வரும் அ. இ. அ. தி. மு. க. பொதுச் செயலாளருமான ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

ராணிப்பேட்டையில் நிகழ்ந்த வன்முறைச் சம்பவங்கள் பற்றி அவர் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் மேலும் கூறுகையில் தி. மு. கவைச் சேர்ந்தவர்களே, தமது காருக்கு தீவைத்துவிட்டு பழியை அ. இ. அ. தி. மு. கவின் மேல் சுமத்துவதாகவும், வன்முறையைத் தூண்டிவிடும் எதிர்க்கட்சிகள், ஆளும் கட்சியினரே வன்முறையைத் தூண்டுவதாக பிரசாரத்தை கட்டவிழ்த்து விட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

## நியாயமற்ற வழிமுறைகளில் அ.இ.அ.தி.மு.க. ஈடுபாடு
### – காங்கிரஸ் குற்றச்சாட்டு

[சென்னை]

பழநி மக்களவைத் தொகுதி தேர்தலில் அ.இ.அ.தி.மு.க. நியாயமற்ற முறைகேடான, வழிமுறைகளில் ஈடுபட்டு வருவதாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்குழு தெரிவித்துள்ளது. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் பொதுச் செயலாளர்கள் வி. தண்டபாணி, பொன்னுசாமி, சுவாமிநாதன் ஆகியோர் கூட்டாக தலைமைத் தேர்தல் ஆணையாளர் டி.என். சேஷனுக்கு அனுப்பி வைத்துள்ள அவசரத் தந்தி யொன்றிலேயே இவ்வாறு தலைமைத் தேர்தல் கமிஷனர் இந்த முறைகேடுகளைத் தவிர்க்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

## மின்சாரக் கோபுரம் தகர்ப்பு

பீகாரில் மிர்சா ரயில்நிலையமருகே உயர் அழுத்த மின்சார டவர் ஒன்றை ஜார்க்கண்ட் தீவிரவாதிகள் தகர்த்து விட்டனர். இதனால் இப்பிரிவில் ரயில் போக்குவரத்து பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. ஜார்க்கண்டிற்கு சுயாட்சி வழங்கும் மசோதாவைத் திருத்தக் கோரி ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சாவின் சோரன் பிரிவு நடத்தும் பொருளாதார முற்றுகைப் போராட்டத்தின் இரண்டாவது நாளில் இச்சம்பவம் நடைபெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

## கட்சிகளின் இணைப்பு

ஜனதாதள், சமாஜ்வாதி ஜனதாக்கட்சி, ஜனதாதள் அஜித்பிரிவு ஆகியன இணைந்து செயற்படுவதற்கு முடிவு எடுக்கப்பட்டுள்ளது. புதுடில்லியில் அண்மையில் நடந்த ஜனதாதள் கட்சியின் அரசியல் விவகாரக் குழுக் கூட்டத்தில் இதற்கான முடிவு ஒருமனதாக எடுக்கப்பட்டதாக ஜனதாதள் கட்சியின் செய்தித் தொடர்பாளர் ஹரிகிசோர் சிங் தெரிவித்தார்.

## தலைவர் கருணாநிதி மீது திட்டமிட்டே தாக்குதல்
### தி.மு.க. பொதுச் செயலாளர்.

(சென்னை)

ராணிப்பேட்டை தொகுதியில் தி. மு. க. தலைவர் கருணாநிதியின் மீது நடாத்தப்பட்ட தாக்குதல் திட்டமிடப்பட்டு நடாத்தப்பட்டதாக தி மு க பொதுச் செயலாளர் க. அன்பழகன் தெரிவித்தார்.

சென்னையில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் மேலும் தெரிவிக்கையில், மத்திய அரசு இது விடயத்தில் உடனடியாக தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அ.இ.அ.தி.மு.கவினர் தி.மு.கவின் வான்ஒன்றை எரித்ததாகவும், ஓட்டன் சத்திரத்தில் மாநில அமைச்சர்கள் சிலரால் தி.மு.க ஆதரவாளர்கள் தாக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் குடியரசுத்தலைவர், பிரதமர், உள்துறை அமைச்சர் ஆகியோருக்கு இது பற்றி அவசரத் தந்தி மூலம் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் இச்சம்பவங்கள் மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு நிலைமையின் சீர்கேட்டைக் காட்டுவதாகவும் தெரிவித்தார்.

ராணிப்பேட்டையில்

## தி. மு. க. தலைவரின் பாதுகாப்பு வான் தீக்கிரை
### மூன்று கார்களும் சேதம்

[சென்னை]

ராணிப்பேட்டை சட்டமன்றத்தொகுதியின் சித்தூர் சாலையில் தி மு க. தலைவர் கருணாநிதியின் பாதுகாப்பு வானமொன்றுநேற்று முன்தினம் தீக்கிரையாக்கப்பட்டது. அ. இ. அ. தி. மு. க. சட்டமன்ற உறுப்பினர்கள் மூவரின் கார்கள் சேதமடைந்தன இருதரப்பினரும் கற்களாலும், ஆயுதங்களாலும் தாக்கிக் கொண்டதாக கூறப்படுகிறது.

சம்பவம் நடந்த இடத்திற்கு உடனடியாக விஜயம் செய்த மத்திய பார்வையாளர் குழு சுற்றிப் பார்வையிட்டது.

இச்சம்பவத்தை தி மு க. தலைவர் மு. கருணாநிதி கண்டித்துள்ளார்.

பழநி மக்களவைத் தொகுதிக்கும், ராணிப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்கும் இன்று திங்கட்கிழமை தேர்தல் நடைபெறவிருப்பது தெரிந்ததே.

## அரபாத்தின் துணிச்சல் இந்திய அரசு பாராட்டு

யாசீர் அரபாத்தின் தைரியமான செயலே இந்த ஒப்பந்தமாகும் என்று இந்திய அரசு இஸ்ரேல் - பி. எல். ஓ. உடன்படிக்கை தொடர்பாக கருத்து தெரிவித்துள்ளது.

இந்திய வெளிநாட்டமைச்சின் அதிகாரி ஒருவர் இது பற்றி மேலும் கூறுகையில், இந்த முதலாவது அத்தியாவசியமான நடவடிக்கையை எடுத்திருப்பதற்காக யாசீர் அரபாத்தையும் அவரது சமாதானப் பேச்சாளர்களினதும் தைரியத்தை இந்திய அரசு பாராட்டுவதாகவும் தெரிவித்தார்.

ஒப்பந்தம் ஏற்படுவதில் பங்கு கொண்டமைக்காக இஸ்ரேலியப் பிரதமர் மற்றும் இஸ்ரேலிய அரசையும் பாராட்டுவதாக அவர் குறிப்பிட்டார்.

## போலந்தில் தேர்தல்

ஐரோப்பாவில் கம்யூனிஸ்ட் கட்சிகளின் செல்வாக்கைக் கேள்விக்குரியதாக்கிய முதலாவது நாடான போலந்தில் நேற்று தேர்தல்கள் நடைபெற்றன. பாராளுமன்றத் தேர்தல்களையடுத்து இங்கு மீண்டும் கம்யூனிஸ்ட் கட்சி பதவிக்கு வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**வேப்பம் விதை சேர்த்து எண்ணை வடித்திடுவோம்**

ஈழநாதம்

# பூநகரி முகாம் பகுதிகளில் விமானக் குண்டு வீச்சு

(தென்மராட்சி)

நேற்றுக் காலை 6.00 மணியில் இருந்து 10.00 மணி வரை பூநகரி முகாமை அண்டிய பகுதிகளில் ஒரே சத்தங்கள் கேட்டவண்ணம் இருந்தன. காலை 6.30 மணியளவில் சிறிலங்கா விமானப் படைக்கு சொந்தமான இரு பொம்பர்களும் உலங்கு வானூர்தி ஒன்றும் முகாமை அண்டிய பகுதியான ஞானிமடம் கேரதீவு இறங்கு துறைப் பகுதிகள் போன்ற இடங்களை நோட்டமிட்டு அப்பகுதியில் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின. இதேவேளை வேறு உலங்கு வானூர்தி ஒன்று கிளாலி, அல்லைப்பளை கடல்கரையில் சுமார் அரைமணிநேரம் மாறி மாறி சுற்றிக் கொண்டு இருந்தது.

இதேவேளை பூநகரி இராணுவ முகாமில் இருந்து கேரதீவு இறங்கு துறையையும் கிளாலிக் கடல்கரையை நோக்கியும் எறிகணைத் தாக்குதல் இடம்பெற்றது. இவ் எறிகணைகள் கடலில் வந்து வீழ்ந்தன. (86)

## ஷெல் வீச்சு துப்பாக்கிச் சூடு

(தொண்டமானாறு)

தீவகப்பகுதி, காரை நகர் ஊரிமுனங்குத்துறைப் பகுதிகளில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா ஆயுதப்படையினர் நேற்று முன் தினம் இரவு 10.45 மணியளவில் மூளாய், பொன்னாலைமக்கள்குடியிருப்புக்களை நோக்கி எறிகணை வீச்சினை மேற்கொண்டனர். இதேவேளை தீவகப்பகுதி அராலித்துறைப்பக்கமாக துப்பாக்கி வேட்டுச்சத்தங்களும் கேட்டவண்ணம் இருந்தன.

மேற்படி பகுதிகளில் இருந்து தொடர்ச்சியாக சில தினங்கள் எறிகணை வீச்சும், பீரங்கித் தாக்குதலும், கலிபர் தாக்குதலும் நடாத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (41]

# பிரிந்த ஜனதா தள கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படும்

(மனிலா)

இந்தியாவில் முக்கிய எதிர்க்கட்சிகளில் ஒன்றான வி.பி. சிங் தலைமையிலான ஜனதா தள கட்சியில் இருந்து முன்பு பிரிந்து சென்ற முன்னாள் பிரதமர் சந்திரசேகர் தலைமையிலான ஜனதா தளம் கட்சி மற்றும் அர்ஜுன் சிங் தலைமையிலான ஜனதாதளம் கட்சி ஆகியன மீண்டும் ஜனதாதளம் கட்சியில் இணைய முடிவு செய்துள்ளன.

இந்த இணைவு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 15ஆம் திகதி நடைபெறுமென்றும் மீண்டும் மூன்று கட்சிகளும் இணைந்து ஒரே கட்சியாக ஜனதாதளம் என்று அழைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நான்கு வட இந்திய மாநிலங்களில் நடைபெற இருக்கும் தேர்தலை முன்னிட்டு மேற்படி கட்சிகள் ஒன்றிணைய முடிவு செய்யப்பட்டுள்ளதாக நம்பப் படுகின்றது.

## ஒத்தி வைப்பு

பி. எஸ். எல். வி. எனப்படும் துருவ செயற்கைக்கோள் செலுத்து வாகனம் செலுத்தும் திட்டம் இருபத்து நான்கு மணி நேரத்துக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளது. நேற்றுக் காலை 10-48 இற்கு இது ஏவி விடப்படுவதற்கு திட்டமிடப்பட்டு இருந்தது தெரிந்ததே. இந்தியாவிலிருந்து செயற்கைக் கோள் ஏவிவிடப்பட இருப்பது இதுவே முதல் தடவையாகும் என்பதுடன் 900 கிலோ மீற்றர் உயரத்திலுள்ள துருவ செயற்கைக்கோள் பாதையில் வைக்கப்படுவதற்காக இந்த தொலை உணர்வு செயற்கைக்கோள் பி. எஸ், எல். வி. ராக்கட்டில் வைத்து ஏவப்படவுள்ளது.

## சென். ஜேம்ஸில் ஆங்கில தினம்

குருநகர் சென் ஜேம்ஸ் மகா வித்தியாலய ஆங்கில தின நிகழ்ச்சிகள் கடந்த வெள்ளிக்கிழமை பி.ப. 11.00 மணியளவில் இப்பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

சென். ஜேம்ஸ் மகா வித்தியாலய அதிபர் திரு. எவ். ஸ்ரனிஸ்லாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு பிரதேச கல்வித்திணைக்கள ஆங்கில உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். அருமைநாயகம் கலந்து கொண்டார். (17)

## பரிசளிப்பு விழா

[சுன்னாகம்]

சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று மாலை2 00 மணிக்கு அதிபர் திரு. செ. குபேரநாதன் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் கலந்து கொள்வார். [11]

## கரும்பலகைமை, வெண்கட்டி கொள்விலையில் விநியோகம்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட பாடசாலைகளில் வெண்கட்டி, கரும்பலகைமை என்பவற்றிற்கு நிலவும் பற்றாக்குறையை குறைப்பதற்காக தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் உதவியுடன் மேற்படி பொருள்கள் தருவிக்கப்பட்டுள்ளன.

இப் பொருள்கள் கொள்விலையில் பாடசாலைகளுக்கு வழங்கப்படவுள்ளதால் தேவைக்கான விண்ணப்பங்களை பாடசாலை அதிபர்கள் கொத்தணி அதிபர்களூடாக எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னர் கல்வித் திணைக்கள களஞ்சியப்பிரிவில் திரு. சி. கந்தையாவிடம் நேரடியாகச் சமர்ப்பிக்குமாறும் வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை மேற்படி பொருள்கள் விநியோகிக்கப்படும்போது பணம் செலுத்தியே பொருள்களைபெற வேண்டுமெனவும் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

## ஆய்வுகூட

றிகள், நுணுக்குக்காட்டிகள், இரசாயனப பொருள்கள் போன்ற பல லட்ச ரூபா பெறுமதிவாய்ந்தமுக்கிய ஆய்வுகூட உபகரணங்கள் எடுத்து வரப்பட்டுள்ளன என பாடசாலை வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

கடந்த 1990 ஆம் ஆண்டு யுத்தம் ஆரம்பித்த பின்னர் யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்குத் தேவையான ஆய்வுகூட உபகரணங்கள் முதல் தடவையாக இங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனபது குறிப்பிடத்தக்கது. (41)

## காயமடைந்த

க. கணநாதன் (வயது 21 - முல்லைத்தீவு), க. குமாரசுவாமி வயது22-முள்ளிவாய்க்கால், இ. காந்தரூபன் (வலயன்மடம்), ம. ...

# அரச சேவை பதவி உயர்வு; முறையான சட்டம் வரும்

(கொழும்பு]

அரசாங்க சேவையில் உள்ள கணக்குவைப்பாளர்கள், காசாளர்கள், களஞ்சியப் பொறுப்பாளர்கள் ஆகியோரிற்கென முறையான தொரு பதவியுயர்வுச் சட்டம் கொண்டுவரப்பட இருக்கின்றது.

அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து அமுலிற்கு வர இருக்கும் இந்தச்சட்டத்தினால் சுமார் 5000 இற்கும் அதிகமான ஊழியர்கள் நன்மையடைவர்.

பொது எழுதுவினைஞர், தட்டெழுத்தாளர், சுருக்கெழுத்தாளர் ஆகியோரிற்கென இத்தகைய பதவியுயர்வுத் திட்டம் ஏற்கனவே நடைமுறையில் உள்ளது கிட்டத்தட்ட இதனை ஒத்ததாகவே மேற்படி பதவியுயர்வுத்திட்டமும் அமைய இருக்கின்றது.

அதன்படி சம்பந்தப்பட்ட மூன்று துறைகளுக்கும் 65சதவீதமான பதவியுயர்வுகள் அதிமுப்பு, திறமை அடிப்படையில வழங்கப்படும் அதைவிட 35 சதவீதமான பதவியுயர்வுகள் போட்டிப்பரீட்சை அடிப்படையில் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## பெண் ஊழியர்களுக்கு சேமலாபநிதி செலுத்தாது பென்சன் வழங்க திட்டம்

[கொழும்பு]

1977ஆம் ஆண்டு ஒக்டோபர் 5ஆம் திகதிக்குப் பின்னர் அரசாங்க சேவையைச் சேர்ந்த சகல பெண் ஊழியர்களுக்கும் பென்சன் வழங்கப்படவுள்ளது. அரசாங்க சேவை சேமலாபநிதிக்கு இவர்களின் சார்பில் அளிக்கப்பட்டு வந்த சந்தாப்பணம் நிறுத்தப்பட்டுள்ளது.

பென்சன் வழங்குவதென்ற அரசாங்கத்தின் இம் முடிவினால் அரசாங்க சேவையிலுள்ள 25 000 க்கு மேற்பட்ட பெண் ஊழியர்கள் நன்மையடையவுள்ளனர்.

சகல இலாகாக்களின் தலைவர்களுக்கும் செயலாளர்களுக்கும் அமைச்சின் செயலாளர் திரு. எம். டி. பி. பீரிஸ் அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் முதலாவது நியமனத் திகதியிலிருந்து இந்தப் பெண் ஊழியர்களுக்கும் பென்சன் வழங்கப்பட வேண்டுமெனத் தெரிவித்துள்ளார்

1957ஆம் ஆண்டு ஏப்பிரல் 29ஆம் திகதியிடப்பட்ட 372 ஆவது இலக்க திறைசேரி சுற்றறிக்கை இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்றும் அந்த சுற்றறிக்கையில் அவர் தெரிவித்துள்ளார்.

## தியாகி திலீபன்

லூர் கந்தசுவாமி கோவில் வீதி, நகைத்தொழிலாளர் சங்கம்; நல்லூர் வட்டம், நல்லூர் கந்தசுவாமி கோவில் வீது, கந்தர்மடம்/கோண்டாவில் மக்கள்; கரவெட்டி வட்டம் நெல்லியடி சாமியன் அரசடி. நெல்லியடி வடக்கு சிற்றூர் மக்கள்; உடுப்பிட்டி வட்டம், உடுப்பிட்டி மத்தி வைரவர் கோவிலடி, இமையாணன் சிற்றூர் மக்கள்; பருத்தித்துறை வட்டம் அல்வாய் மூத்துமாரியம்மன் கோவிலடி, பருத்தித்துறை தெற்கு மக்கள்; பனைவட்டம் பளை பிரதேச சபை முன்றல், புலோப்பளை சிற்றூர் மக்கள் தும்புஆலை ஊழியர்; கொடிகாமம் வட்டம், புகையிரத நிலைய அருகாமை கேடில்ஸ் நகர், உசன்யாசிரீ ச.ச நிலையம், நாவலர் ச.ச நிலையம் கோயிலாமலை, மிருசுவில் அ.த.க. பாடசாலை, மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம், கினாலி றோ. க. த. க. பாடசாலை; சாவகச்சேரி வட்டம்

## வாந்திபேதிக்கு

ளில் காணப்படும் குடிநீர் கிணறுகளை சுத்திகரிக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் மேற்படி நோய்த் தாக்கத்துக்குள்ளானவர்கள் குறித்தும் இவ்வாறானவர்களுடன் நெருங்கிப் பழகியவர்கள் குறித்தும் விழிப்புணர்வுடன் சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.

இதேவேளை மேற்படி நோயை குடாட்டுக்குள் கொண்டுவந்தவர்கள் குறித்தும் இந்நோயின் காவிகள் எனக்கருதப்படுபவர்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. காவிகள் எனக் கருதப்படும் சில நபர்களைக் கண்டு பிடித்து சிகிச்சையளிப்பதற்காக பொது சுகாதாரப் பரிசோதகர்களைக் கொண்ட பல குழுக்கள் தேடுதல் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளன என்றும் யாழ். சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தெய்வேந்திரன் மேலும் தெரிவித்தார்.

## தியாகி

வருகிறது. நேற்றுக் காலை நீராவியடி நகர் மக்களால் நீராவியடி நகர் மாவீரர் மண்டபமும் முன்றலும் சிரமதானப்பணி மூலம் துப்புரவு செய்யப்பட்டது.

மேலும் நாளைமறு தினம் நீராவியடி நகர் மக்களால் ஒரு நாள் அடையாள உண்ணாவிரதமும் அனுஷ்டிக்கப்படும்

கடற்புலிகளின் வலிகாமம் வட்டத்திற்குட்பட்ட பிரதேசமான அராலி மத்தியில் முருகமூர்த்தி மகாவித்தியாலயத்தில நடைபெற்ற 6-ம் ஆண்டு தியாகி திலீபனின் அடையாள உண்ணாவிரதம நேற்று காலை 8 05 மணியளவில் அராலி மத்தி முருகமூர்த்தி மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது இதில் கடற்புலிகளின் அராலி பிரதேசப் பொறுப்பாளர் செல்வன் பாலகுமார் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து கடற்புலிகளின் தமிழீழ மாவீரர் பணிமனை பொறுப்பாளர் செல்வன் ஜெயந்தன் ஈகைச் சுடரேற்றி வைத்தார் இதனைத் தொடர்ந்து கடற்புலிகளின் வலி கிழக்கு பிரிவுப் பொறுப்பாளர் செல்வன் பூவேந்தன் மலர்மாலை அணிவித்து இவ் வடையாள உண்ணாவிரதத்தை ஆரம்பித்து வைத்தார் இந் நிகழ்வில் கவிதை ஒலிப்பதிவு நாடா வீடியோ, பாடல்கள் போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றன. இதில் உணர்வுபூர்வமாக பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர். இதில் கடற்புலிகளின் குருநகர் பிரதேசப் பொறுப்பாளர் செல்வன் சதீஸ் அவர்கள் உண்ணாவிரதத்தில் கலந்து கொண்ட மக்களுக்கு கருத்துரை வழங்கியும் நீராகாரம் வழங்கி உண்ணாவிரதத்தை நிறைவு செய்தார்.

## பதவி வெற்றிடம்

## உள்வந்த வெளிச்சென்ற

# கரும்பலகைமை, வெண்கட்டி கொள்விலையில் விநியோகம்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட பாடசாலைகளில் வெண்கட்டி, கரும்பலகைமை என்பவற்றிற்கு நிலவும் பற்றாக்குறையை குறைப்பதற்காக தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் உதவியுடன் மேற்படி பொருள்கள் தருவிக்கப்பட்டுள்ளன.

இப் பொருள்கள் கொள்விலையில் பாடசாலைகளுக்கு வழங்கப்படவுள்ளதால் தேவைக்கான விண்ணப்பங்களை பாடசாலை அதிபர்கள் கொத்தணி அதிபர்களூடாக எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னர் கல்வித் திணைக்கள களஞ்சியப்பிரிவில் திரு. சி. கந்தையாவிடம் நேரடியாகச் சமர்ப்பிக்குமாறும் வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை மேற்படி பொருள்கள் விநியோகிக்கப்படும்போது பணம் செலுத்தியே பொருள்களைப் பெற வேண்டுமெனவும் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.


## பதவி வெற்றிடம்

### கணக்காளர் பதவி (ஆண்)

கிளிநொச்சியில் இயங்கும்
பத்திரிகை நிறுவனத்துக்கு

### கணக்காளர் தேவை

சம்பளம்: மாதாந்தம் ரூ. 3000/-

அத்துடன் இலவச தங்குமிட வசதி
சாப்பாடு ஆகியனவும் ஒழுங்கு செய்து தரப்படும்.

தகுதியான ஆண் விண்ணப்பதாரர் 22 09 93 புதன்கிழமை காலை 10. 00 மணிக்கு தகைமைச் சான்றிதழ்கள், முன் வேலை அனுபவச் சான்றிதழ்கள் ஆகியவற்றுடன் நேரில் சமுகம் தரவும்.

ஈழநாதம் நிறுவனம்
யாழ்ப்பாணம்.

(இ)



குருநகர் வர்த்தகர் சங்கம்

## முக்கிய அறிவித்தல்

தியாகி லெப். கேணல் திலீபனின் ஆறாம் ஆண்டு நினைவு நிகழ்வுகளை முன்னெடுக்க குருநகர் வர்த்தக சங்கம் (21 09 93) செவ்வாய்க்கிழமை ஒரு நாள் அடையாள உண்ணாவிரதத்தை நடத்துகிறது. அன்றைய தினம் குருநகர் எல்லைக்குட்பட்ட சகலதுறை வர்த்தகர்களும் ஸ்தாபனங்களை மூடி காலை 6. 30 மணிக்கு ஊழியர்களையும் அழைத்துக்கொண்டு உண்ணாவிரதத்தில் கலந்து கொள்ளும் பொருட்டு காரியாலயத்தில் சமுகம் தரவும்.

சு. கிறிஸ்ரி (உப தலைவர்) — க. சி. கிருஷ்ணன் (செயலாளர்)

(சி-7451)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


றிகள், நுணுக்குக்காட்டிகள், இரசாயனப் பொருள்கள் போன்ற பல லட்ச ரூபா பெறுமதிவாய்ந்த முக்கிய ஆய்வுகூட உபகரணங்கள் எடுத்து வரப்பட்டுள்ளன என பாடசாலை வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

கடந்த 1990 ஆம் ஆண்டு யுத்தம் ஆரம்பித்த பின்னர் யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்குத் தேவையான ஆய்வுகூட உபகரணங்கள் முதல் தடவையாக இங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனபது குறிப்பிடத்தக்கது. (41)

### காயமடைந்த

க. கணநாதன் (வயது 21 - முல்லைத்தீவு), க. குமாரசுவாமி வயது 22-முள்ளிவாய்க்கால், கி. காந்தருபன் (வலயன் மடம்), ம. அனபன் ஜெயக்குமார் (புதுமத்தாள்), ஜெ. ஆனந்தன் (9 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு), ம. சுரேஸ் (மத்தளன்), பாபு (பொக்கணை), சு. அடைக்கலராசா (மத்தளன்), வி. தவராசசிங்கம் (3 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு), பொ. சுதாஜினி (2 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு), போ. பத்மசாந்தி (புதுமத்தளன்), இ. சுபாஜினி (2 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு). அ. பத்ம உதயராணி (புதுமத்தளன்) தங்கவேலு (வயது 39 - 8 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு), ப. ஜராட் (முல்லைத் தீவு), இ. சௌந்தரராஜன் (5 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு). அ. வேலாயுதம் [அம்பலவன் பொக்கணை), செ. உதயன் (அம்பலவன் பொக்கணை) வை. பாபு [வட்டுவாகல்].

### 15 வயதுக்கு

சர்வதேச தொழில்ஸ்தாபனங்களின் சட்டதிட்டங்களுக்கு அமையவும், இலங்கையின் குழந்தைகள் சாசனத்துக்குத் அமையவும் பிள்ளைகளை வேலைக்கமர்த்துவதற்கான வயது 15 ஆக இருக்க வேண்டுமெனக் கமிட்டி சிபார்சு செய்துள்ளது.

15வயதுக்குட்பட்ட பிள்ளைகளை வேலைக்கமர்த்துவது முற்றாகத் தடைசெய்யப்பட வேண்டுமென கமிட்டியின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பிள்ளைகள் தமது பெற்றோர்கள் அல்லது பதிவு செய்யப்பட்ட பாதுகாவலர்களுடன் குடும்ப வேலைகளில் ஈடுபடுவதைக் கமிட்டி அனுமதித்துள்ளது

15, 16, 17 வயதுப் பிள்ளைகளை வேலைக்கமர்த்துவதற்கு அவர்களின் தொழில், சுகாதாரம், வேலைமுறைகள், சம்பளம் ஆகியவை பற்றிச் சட்டங்கள் இருக்க வேண்டுமென்றும் கமிட்டி சிபார்சு செய்துள்ளது.

வில் மக்கள்; கரவெட்டி வட்டம் நெல்லியடி சாமியன் அரசடி. நெல்லியடி வடக்கு சிற்றூர் மக்கள்; உடுப்பிட்டி, வட்டம், உடுப்பிட்டி மத்தி வைரவர் கோவிலடி, இமையாணன் சிற்றூர் மக்கள்; பருத்தித்துறை வட்டம் அல்வாய் முத்துமாரியம்மன் கோவிலடி, பருத்தித்துறை தெற்கு மக்கள்; பளைவட்டம் பளை பிரதேச சபை முன்றல், புலோப்பளை சிற்றூர் மக்கள் தும்புஆலை ஊழியர்; கொடிகாமம் வட்டம், புகையிரத நிலைய அருகாமை கேடில்ஸ் நகர், உசன்யாசீர் ச.ச நிலையம், நாவலர் ச. ச நிலையம் கோயிலாமனை, மிருசுவில் அ த க. பாடசாலை, மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம், கினாலி றோ. க த. க. பாடசாலை; சாவகச்சேரி வட்டம் மணம்குணாட பிள்ளையார் கோவில் முன்றல், சாவா நகர், மட்டுவில் சந்திபுரம், கல்வயல் கைதடி, நுணாவில் தச்சுத்தொழிலாளர் சங்கம் மட்டுவில் தெற்கு சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம்; கைதடி வட்டம், கைதடிச் சந்திக்கு அருகாமையில். மறவன்புலோ சிற்றூர், சிறீமுருகன் ச.ச.நி தனங்கிளப்பு தெற்கு. தனங்கிளப்பு மாதர் சங்கம், மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயம்; தீவகக் கோட்டம் நல்லூர் கந்தசாமி கோவில் முன்றல், டயஸ் குடியிருப்பு, வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை.

### கலந்து கொள்ளும் பாடசாலைகள்

நாளைய உண்ணாவிரத நிகழ்வுகளில் கலந்து கொள்ளவுள்ள பாடசாலைகள் விபரம் வருமாறு;

வேலணை சைவப்பிரகாச வித்தி. மட்டுவில் தெற்கு கனிஷ்ட வித்தி, தனங்கிளப்பு அ த. க பாடசாலை, மறவன்புலோ சகல கலாவல்லி மகளிர் ம. வி, மீசாலை வீரசிங்கம் மகாவித்தி, மிருசுவில் அ த.க பாடசாலை, வரணி அ. த. க பாடசாலை, கரம்பை அ.மி. த. க.பாடசாலை, கினாலி றோ.க பாடசாலை' கோவில் வயல் சி சி. த. க. பாடசாலை, சைவப்பிரகாச வித்தியாசாலை, புலோலி அ. த க. பாடசாலை, கெருடாவில் அ.த.க, பாடசாலை, தொற்றாவத்தை அ. த. க பாடசாலை தேவரயாளி இந்துக் கல்லூரி, கரவெட்டி கிழக்கு அ.த.க. பாடசாலை யாழ். இந்துமகளிர் கல்லூரி, யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி, புனித மேரீஸ் றோ. க. நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தி, கொட்டடி நவசிவாய வித்தியாலயம், கோண்டாவில் பரஞ்சோதி வித்தி, கோண்டாவில் றோ. க. த க.

மேலும் மேற்படி நோயத் தாக்கத்துக்குள்ளானவர்கள் குறித்தும் இவ்வாறானவர்களுடன் நெருங்கிப் பழகியவர்கள் குறித்தும் விழிப்புணர்வுடன் சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.

அதேவேளை மேற்படி நோயை குடாட்டுக்குள் கொண்டுவந்தவர்கள் குறித்தும் இந்நோயின் காவிகள் எனக்கருதப்படுபவர்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. காவிகள் எனக் கருதப்படும் சில நபர்களைக் கண்டு பிடித்து சிகிச்சையளிப்பதற்காக பொது சுகாதாரப் பரிசோதகர்களைக் கொண்ட பல குழுக்கள் தேடுதல் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளன என்றும் யாழ். சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தெய்வேந்திரன் மேலும் தெரிவித்தார்.

பாடசாலை, திருநெல்வேலி இந்து கலவன் பாடசாலை, யாழ்ப்பாணக் கல்லூரி சங்கானை கிழக்கு விக்னேஸ்வரா வித்தி, ஐக்கிய சங்க சைவ வித்தி திருநாவுக்கரசு வித்தி, மாரீசன்கூடல் றோ. க, த. க. பாடசாலை, வலித்தூண்டல் றோ. க. த, பாடசாலை, மல்லாகம் கனிஷ்ட வித்தி, ஆருணாசலம் வித்தி. நடேஸ்வரா கனிஷ்ட வித்தி, ஆவரங்கால் நடராசா, ஆவரங்கால் மகாஜனா, இணுவில் சைவப்பிரகாச, உடுவில் மான்ஸ், உடுவில்முருகமூர்த்தி தாவடி இ. த. க, மல்வத்தை றோ. க. த உடுவில் அ. த.க. உடுவில் மான்ஸ் த. க, உடுவில் ஹோலிநேசரி, புதுமடம் றோ. க. த, உடுவில் மகளிர் கல்லூரி, ஆனைக்கோட்டை றோ. க. த, ஆனைக்கோட்டை அ. த. க, உரும்பராய் குணபால, ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய, ஆனைக்கோட்டை றோ, க. த. க.

### சிரமதானம்

தியாகி திலீபன் நினைவாக நாளை மேற்கொள்ளப்படவுள்ள உண்ணாவிரதப் பணிகள் வருமாறு;

கோப்பாய் வட்டம் கோப்பாய் கிருஷ்ணன் கோயிலடி முகாம் மக்கள், கிருஷ்ணர் கோயில் முகாம் துப்புரவு செய்தல் உடுவில் / தெல்லிப்பளை வட்டம் புன்னாலைக்கட்டுவன் வைத்தியசாலை துப்புரவு செய்தல். நல்லூர் வட்டம் பலாலி வீதி துப்புரவு செய்தல், கரவெட்டி வட்டம் துன்னாலை மேற்கு பொதுமயானம் கலைமகள் ச. ச. நி. உறுப்பினர் பொதுமக்கள்: பருத்தித்துறை வட்டம் மாணாண்டி சந்தை துப்புரவாக்கம், விநாயகர், அம்பிகை ச. ச, நிலைய உறுப்பினர்கள் பொது மக்கள் தீவககோட்டம் சாம்சன் குடியிருப்பு பாலம் புனரமைத்தல்,

மேலும் நாளைமறு தினம் நீர்வேலி நகர் மக்களால் ஒரு நாள் அடையாள உண்ணாவிரதமும் அனுஷ்டிக்கப்படும்

கடற்புலிகளின் வலிகாமம் வட்டத்திற்குட்பட்ட பிரதேசமான அராலி மத்தியில் முருகமூர்த்தி மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற 6-ம் ஆண்டு தியாகி திலீபனின் அடையாள உண்ணாவிரதம நேற்று காலை 8 05 மணியளவில் அராலி மத்தி முருகமூர்த்தி மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது இதில் கடற்புலிகளின் அராலி பிரதேசப் பொறுப்பாளர் செல்வன் பாலகுமார் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

வைத்து இவ் அடையாள உண்ணாவிரதத்தை ஆரம்பித்து வைத்தார் இந்நிகழ்வில் கவிதை ஒலிப்பதிவு நாடா வீடியோ, பாடல்கள் போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றன. இதில் உணர்வுபூர்வமாக பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர். இதில் கடற்புலிகளின் குருநகர் பிரதேசப் பொறுப்பாளர் செல்வன் சதீஸ் அவர்கள் உண்ணாவிரதத்தில் கலந்து கொண்ட மக்களுக்கு கருத்துரை வழங்கியும் நீராகாரம் வழங்கி உண்ணாவிரதத்தை நிறைவு செய்தார்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 19-09-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 10976

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்

24-7360, 42-9326, 28-1862, 43-3576, 27-6524.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-1169, 24-8029, 27-8160, 26-9797, 27-0089
41-9876, 28 8951, 24 6475, 24-0878, 26-6026
24-9758, 26-6984, 26-3893, 24-6972, 24-4560
26-0407, 24-7522, 27-7740, 42-2862.

## மரண அறிவித்தல்



### கந்தையா பரமானந்தன்

(அதிபர்/அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை)

அல்வாய் தெற்கைப் பிறப்பிடமாகவும், அல்வாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கந்தையா பரமானந்தன் (அதிபர்) அவர்கள் (18-09 93) சனியன்று அகால மரணமானார் அன்னார் காலஞ்சென்ற கந்தையா சிவயோகம் தம்பதியரின் புதல்வரும், சிவகுமாரியின் (மதி) அன்புக் கணவரும். மிதிலாவின் அன்புத் தந்தையும், சிவபாக்கியம், சயானந்தன் ஆகியோரின் சகோதரரும், சதாசிவம் பூரணம் தம்பதியரின் மருமகனும், கனகசபாபதி, புவனம்பிகா, சசிகலா, கௌசிகை ஆகியோரின் மைத்துனரும், பொ.கணேசு. நா.சிவராஜா ஆகியோரின் சகலனுமாவார். இறுதிக்கிரியைகள் (20-09-93) இன்று பங்கு வேம்படி மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
குடும்பத்தினர்

(5056)